விலை ரூபா 2=00 ★ 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 ஆவணி 9 ஜுலைகஜ் 8 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (25—8—85) இதழ் 196

## கண்டன சுவரொட்டிகள்!

(யாழ்ப்பாணம்)

''விடுதலைப்போராளிகளை நாடுகடத்த வேண்டாம்'' என்று இந்திய மத்திய அரசைக்கேட்டுக் கொள்ளும் பெரிய சுவரொட்டிகளை 'ஈழதேசிய விடுதலை முன்னணி' (ஈ. என். எல் எப்.) வெளியிட்டுள்ளது.

(12ம் பக்கம் பார்க்க)

● டாக்டர் பாலசிங்கம் ● சந்திரகாசன்

# நாடு கடத்தும் உத்தரவுக்கு தமிழகத்தலைவர்கள்கண்டனம்

## இன்றிரவு 7-30 மணியுடன் 'காலக்கெடு' முடிகிறது

(சென்னை)

டாக்டர் எஸ் ஏ. பாலசிங்கமும், திரு. எஸ். சி. சந்திரகாசனும் இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்படுவதை, தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகள் கடுமையாக எதிர்த்துள்ளன.

இந்திய நாட்டிலிருந்து இவர்களை வெளியேற்றும் உத்தரவை நிறுத்தி வைக்குமாறுகோரி, பல தலைவர்களும் தமிழக அமைச்சர்கள் சிலரும், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு அவசரத் தந்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

[நேற்று முன்தினமிரவு ஏழரை மணியளவில் 'அமுலு'க்குவந்த நாற்பத்தெட்டு மணிநேர நாடுகடத்தல் உத்தரவின் காலக்கெடு இன்றிரவு ஏழரை மணியுடன் காலாவதியாகிறது]

(11ம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம், சந்திரகாசனுக்கு வெளியேற்ற உத்தரவு

[சென்னை]

சென்னையிலுள்ள இலங்கைத் தமிழ் பிரமுகர்கள் டாக்டர் ஏ. எஸ் பாலசிங்கத்தையும் திரு எஸ். சி. சந்திரகாசனையும் நாற்பத்தெட்டு மணி நேரத்தில் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேறுமாறு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் பாலசிங்கத்திற்கும், ஈழத் தமிழர்களை படுகொலைகளிலிருந்து காப்பதற்கான அமைப்பின் (PROTECT) தலைவர் திரு சந்திரகாசனுக்கும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கூறும்

(12-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையத்தில் சந்திரகாசன் நேற்று முழுநாளும் சாப்பிடமறுப்பு!

(சென்னை)

இந்தியாவிலிருந்து வெளியேறுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்து அடையாறிலுள்ள ஒருபொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள திரு. எஸ். சி சந்திரகாசன், நேற்று முழு நாளும் உணவருந்தவில்லை என்றும் சாப்பிட மறுப்புத் தெரிவித்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

''நான் வெளிநாடுபோவதானால் இலங்கைக்குத்தான் போவேன் வேறு எங்கும் செல்லமாட்டேன்'' என்று திரு சந்திரகாசன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

''நீங்கள் விரும்பும் எந்த நாட்டுக்கும் நீங்கள் போகலாம்'' என்று பொலிஸார் கூறியபோதிலும் திரு சந்திரகாசன் இலங்கையைத்தான் வலியுறுத்தி வருகிறாராம்.

## தமிழ் மக்கள் படுகொலை: ஹெக்டரிடம் ராஜீவ் கவலை

[சென்னை]

இலங்கையில் அப்பாவி சிவிலியன்கள் கொல்லப்படுவதை நிறுத்துவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென்றும் ஆக்கபூர்வமான பேச்சுக்கள் நடத்துவதற்கு உதவியாக நம்பிக்கைச் சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்றும் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இலங்கை அரசு பிரதிநிதி குழுவின் தலைவர் கலாநிதி ஹெக்டர் ஜெயவர்த்தனாவிடம் வலியுறுத்தியிருக்கிறார்.

கலாநிதி ஹெக்டர் ஜெயவர்த்தனா நேற்று புதுடில்லியில் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை இரண்டாவது தடவை சந்தித்து பேசியபோது

(12-ம் பக்கம் பார்க்க)

## "இனப்பிரச்னைக்குதீர்வுகாண இந்தியா தீவிரமுயற்சி"

(ஹவானா)

இலங்கை இனப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாண இந்தியா தொடர்ந்து முழு மனத்துடன் முயற்சி மேற்கொள்ளும் என்று பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி கியூபா

(12-ம் பக்கம் பார்க்க)

## சாம்பல் தீவுப் பாலம் குண்டுவைத்து தகர்ப்பு

இ பெஞ்சமின்

சாம்பல்தீவுப் பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதால் நிலாவெளிக்கும் திருகோணமலைக்குமிடையேயுள்ள பிரதான பாதை துண்டிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் படகுமூலம் சேவை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதால் நிலாவெளியில் முகாம் ஒன்றில் அகதிகளாகத் தங்கியிருக்கும் 1050 குடும்பங்களைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம்.

இம்முகாமில் உள்ளோருக்கு அரசாங்கம் இதுவரை எந்த வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து இளைஞர் மன்றம் ஓரளவு உணவு வசதியை வழங்கிவந்த போதிலும் பிரதான வீதி துண்டிக்கப்பட்டதால் அதுவும் செய்யமுடியாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (ரா-மா)

## 350 வீடுகள் தீக்கிரை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை வந்தாறுமூலையில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தின் போது 350 தமிழர்களின் வீடுகள் நேற்று தீ வைத்து எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வந்தாறுமூலை, மாவடிவேம்பு, சித்தாண்டி, மொறக்கொட்டான் சேனை, சந்திவெளி ஆகிய இடங்களிலுள்ள வீடுகளே எரிக்கப்பட்டுள்ளன இதனால் 1200 தமிழர்கள் அகதிகளாகி மூன்று முகாம்களில் தஞ்சமபுகுந்துள்ளனர்

மேலும் சில கடைகளும் தனியார் மில் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. [ரா-மா]

## இன்று 17 வது நாள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இன்று 17 வது நாளாக ஐந்து தமிழ் இளைஞர்களும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இவர்களில் மூவரின்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது. (மா)

V'DEO VISION

(வீடியோ விசன்)

யாழ்ப்பாணத்தில் திருமணம் மற்றும் சகல மங்களகரமான வைபவங்களுக்கும்

நவீன காமிராக்களைக்கொண்டு "வீடியோ" படம் எடுத்து நிகழ்ந்தவற்றை நினைவூட்டும் வகையில் கண்டு களிப்புற எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் நிபுணர்களின் சிறந்த சேவையும் குறைந்த செலவும்

வீடியோ விசன்,

213, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (196)

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீடுகட்டுவதற்கும், தொழில் செய்யக்கூடியதுமான, கிணறு மதில் ஆகிய வசதிகளுடன் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 84, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 203

கோவில்களுக்கு தேவையான பெரியமணி, குத்துவிளக்கு, திருவாசி கிடாரம், குடம், சருவம், செம்பு, தீபம், தூபம், சரவிளக்கு, தாம்பாளம், ஃப்ளவர்வாஸ், மெளருகு திரிஸ் ரேண்ட் வகைகள் மற்றும் அலுமினியம், பித்தளை எவர்சில்வர் அலுமினியப் பொருட்கள் ஆகியவற்றுக்கு: ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோஸ், 26 B, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 202

மாங்குளம் சந்தியில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் குள வசதியுள்ள 20 ஏக்கர் விவசாயக் காணி குத்தகைக்கு அல்லது விற்பனைக்குண்டு கணேசநாதன், தம்பசிட்டி, பருத்தித்துறை. 216

தொழிற்சாலை உற்பத்தியின் போது பழுதடைந்த அலுமினியப் பாத்திரங்கள் மலிவு விலையில் கிடைக்கும். செல்லா சன்ஸ் சேல்ஸ் சென்ரர், 118, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 224

நல்ல நிலையிலுள்ள மின்தறி ஒன்று கமிஷனுக்கு விற்பனைக்கு உண்டு விளம்பர இல: 176, C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 176

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள லோட்டன் வீதிக்கு மிகச் சமீபமாக வீடு கட்டக்கூடிய இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:-க. பஞ்சலிங்கம், "சோதி நிலையம்", மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். 183

## மணப்பந்தல்

உயர் இந்து வேளாளர் குல வயது 32, அழகும், குணமுமுடைய கொழும்பில் படித்த, குடும்பம் நடத்தும் தகைமை வாய்ந்த மகளுக்கு குடும்பத்தினர் மணமகன் தேடுகிறார்கள். நல்லூரில் வசதியான வீடும் ரொக்கமும், நகையும் தரப்படும். உத்தியோகமுடைய நற்குடும்பத்தவர் ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும்; விளம்பர. இல 181, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 181

அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில் கடமை புரியும் போதிய வருமானமுள்ள கண்ணியமான ஒருவருக்கு 27 வயதுக்கும் 33வயதிற்கும் இடைப்பட்ட உயர் இந்து வேளாள குடும்பத்தைச்சேர்ந்த செவ்வாய் தோஷமற்ற மணமகள் தேவை அண்மையில் எடுத்த போட்டோவுடன் சாதகக் குறிப்பையும் மற்றும் விபரங்களையும் அனுப்பிவைக்கவும். போட்டோ திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல. 144, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 144

### குத்தகைக்கு

நல்ல நிலையில் இயங்கும் பேக்கரி உரிமையாளர் வெளிநாடு செல்வதால் சகல தளபாடங்களுடன் கமிசனுக்கு அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்படும். ரட்ணா கபே, ஸ்ரேசன் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம. 232

## தேவை

கடைக்கணக்கு எழுதக்கூடியவர் ஒருவர் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேரில் வரவும். சரஸ்வதி ஸ்ரோஸ், 55, பெரியகடை, யாழ்ப்பாணம். 228

டிக்கட் டவல்ஸ் ஏஜென்டிற்கு பெண் இலிகிதர் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும் திரு றேட் சென்டர், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 221

அச்சகத்திற்கு பிளேட்டின் மெசின் வேலை நன்கு தெரிந்த அனுபவமுள்ள வேலையாள் தேவை நற்சான்றுப் பத்திரத்துடன் வரவும். கு. வி அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 220

நல்ல இரகக் கொப்பரு 1 கிலோ 2/- ரூபாய்ப்படி கொள்வனவு செய்கிறோம். சி. எஸ். கே. மில் யாழ்ப்பாணம். 142

பலஇன கோழிகளும் இறைச்சிக்குத் தேவை. நியாய விலையுடன் நேரில் வந்தும் பெற்றுக்கொள்ளப்படும் ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23131. 184

யாழ் நகரில் உள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு ஆங்கில, பெண் சுருக்கெழுத்தாளர்/தட்டெழுத்தாளர் தேவை. ஆங்கிலத்தில் நல்ல அறிவும் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் சிறந்த தேர்ச்சியும், (தட்டெழுத்தில் நிமிடத்திற்கு 40 சொற்களுக்கு குறையாமல், சுருக்கெழுத்தில் நிமிடத்திற்கு 80 சொற்களுக்கு குறையாமல்) உடையவராய் இருத்தல் வேண்டும். 31-08-85க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 198 மே/பா 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 198

முன்கரியர் உள்ள டிலிவரி சைக்கிள் உடனடி தேவை. நல்லநிலையில் இருந்தால் நேரில் வரவும். "றோயல் இன்டஸ்றீஸ், பொல்லையா லேன், வண்ணார்பண்ணை வட மேற்கு, ஆனைக்கோட்டை. 177

குழந்தை பராமரிப்புக்கும் வீட்டு வேலைக்குமாக அனுபவமுள்ள பெண் பணியாள் வயது 18 — 45 தேவை. தொடர்பு: ஆ. தி விஜயநாதன் (சந்திரன் மாஸ்டர்) இணுவில் மேற்கு. [230]

## சேவை

35 வருடங்களுக்கு மேலாக அரசாங்க வைத்தியசாலையில் பிரதம வைத்தியராகக் கடமையாற்றிய [Special Grade R.M P] தினமும் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 1 00 மணி வரை சேவைக்கு இருக்கிறார். விபரங்களுக்கு:- டாக்டர். மு. சச்சிதானந்தம், "வேதாரணியர் வளவு", உடுவில் கிழக்கு, சுன்னாகம். 211

வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகள், தமிழ் ஆங்கில தட்டச்சு, றோனியோ வேலைகள். அஞ்சல்வழி ஆங்கிலம், திருமண சேவை ஆகியனவற்றிற்கு-மல்ரிசேவிசஸ்: 37(351), மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி), யாழ்ப்பாணம். தொலைபேசி: 22762. 189

## நூலாக்க முயற்சி

(வட்டுக்கோட்டை)

வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் கோயில் தொடர்பான வரலாற்று நூலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

இக் கோயில் தொடர்பான தகவல்களும் குறிப்புகளும் வைத்திருப்போர் யாழ். ஐயனார் கோவிலடி, திரு ப. கணேசலிங்கம்என்பவருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கில் தெல்லிப்பழை வீமன் றோட்டில் (கூத்தன் சீமா) சந்தைக்கு முன்பாக வீட்டுடன் கூடிய 4½ பரப்பு சோமசுந்தரத்தின் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.தி.விஜயநாதன், (சந்திரன் மாஸ்ரர்) இணுவில் மேற்கு. 231

## கேள்விப் பத்திரங்கள்

ஆஸ்பத்திரிகளுக்கும், நிறுவனங்களுக்கும் பாண், விறகு போன்ற பொருட்களை விநியோகம் செய்வதற்கும்; வாகன சேவைக்குமான கேள்விப்பத்திரங்கள் நாலாவது காலாண்டுக்கு விற்பனைத் திணைக்களத்தால் கோரப்படுகின்றன. விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் 11-09-85 மாலை 3 மணி வரை காரியாலயத்திலும், திணைக்கள ஆஸ்பத்திரி விநியோகக் கிளைகளிலும் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவு திகதி: 12-09-85

பிராந்திய கணக்காளர்,
விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்,
250, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

163

அளவெட்டி-மல்லாகம்
பலநோக்குக் கூட்டுறவுச்
சங்கம்

## லொறி விற்பனைக்கான கேள்விப்பத்திரம்

அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவனையிலுள்ள இசுசு லொறி இல. 24 ஸ்ரீ7106 கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 50/-ம், மீளப் பெறக்கூடிய வைப்புப்பணம் ரூபா 1000/- மும் செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்பட வேண்டும். கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சீல் வைக்கப்பட்ட உறைகளில் வைத்து கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 24 ஸ்ரீ 7106 இசுசு லொறிக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "பொது முகாமையாளர், அளவெட்டி-மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அளவெட்டி" என்னும் முகவரியில் பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ 5-9-85ம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் ஒப்படைக்கப்படவேண்டும்.

பொது முகாமையாளர்

162

கல்வியியல் மாணவருக்கு ஒரு அரியநூல்
எழுதியவர்:
கலாநிதி ஐ. கருணானந்தன் B. Sc., M.A. Ph. D.

## பிறப்புரிமை நெறியாள்கை (GENETIC ENGINEERING)

"மேலைத்தேய புதிய அறிவியற்றுறைகளுடன் கீழைத்தேய மெய்ஞ்ஞான வித்துக்களான புராண இதிகாசக் கதைகளின் விழுமியங்களையும், கர்நாடக சங்கீதத்தின், விஞ்ஞானப் பண்புகளையும் ஒன்றிணைத்துத் தரப்பட்டுள்ளது" "ஈழநாடு" 30-06-1985

கிடைக்குமிடம்:
EASOSEAC LTD,
33, Brown Road.
Neeraviyady.
Jaffna.

விலை:
ரூபா 10-00

[229]

## ஏஜென்சிகள் தேவை

தமிழ்மக்களின் அபிமான தினசரியான "ஈழநாடு"வுக்கு பின்வரும் இடங்களில் ஏஜென்சிகள் தேவை

★ அனலைதீவு ★ புன்னாலைக்கட்டுவன்
★ விசுவமடு ★ நயினாதீவு ★ மிருசுவில்
★ அக்கராயன் ★ பரந்தன் ★ மயிலிட்டி
★ ஒட்டுசுட்டான் ★ கொக்குவில்

பொதுமுகாமையாளர்,
"ஈழநாடு", யாழ்ப்பாணம்.

[215]

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை

### ஆகஸ்ட் 1986 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 9-9-85ல் ஆரம்பமாகின்றன.

பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அநேகர் ஒவ்வொரு வருடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்.

அதிபர்,
376, பிரதானவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(4983) தொலைபேசி எண்: 22617

## 90-ம் நாள் நினைவஞ்சலி

செல்வன் இராஜேந்திரா சிவஜீவன் (பபா)



பகைப்பு:
13-09-1968

அழிப்பு:
29-05-1985

ஈரைந்து மாதம் சுமந்தீன்றெடுத்த தாயின் கன்னம் - உன்
நினைவுகளின் துயரமதால் நீரோடிக் கசிந்திருக்க
செங்குருதி பாயாமல் அணைபோடச் சென்றமைந்தன்
உன்குருதி கண்டதந்தை வெந்தே கலங்கிநிற்க
கூடப்பிறந்து ஒன்றாய் கூடி வளர்ந்த தம்பி - உனைத்
தேடிக் காணாமல் வாடுகின்ற அண்ணனுமிங் கழுதிருக்க
கன்னி பூத்தநனை நீராட்ட வருவான் என்றே
எண்ணிக் காத்த தங்கை வழிந்திடும் கண்ணீரில் நீராட
பேர் சொல்லப் பிள்ளையின்றி மாரோடு உனை
வளர்த்த உறவினரும்
பார்விட்டு நீசென்றாய் எனக்கேட்டுப் பதைபதைத்துப்
பரிதவிக்க
ஈழத்தாய் விலங்கறுக்க வீரமொடு வீறுடனே களம்புகுந்த
நேரம்தான் கூற்றுவனும் உனைக் கவருமெண்ணம்
கொண்டானோ
ஆத்மார்த்தமாக உந்தன் ஆன்மாவே எங்களுடன் சங்கமிக்க
உன் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்க எப்படி நாம்
மனங்கொள்வோம்.

உன் பிரிவால் துடிக்கும்:
அம்மா, அப்பா, அண்ணா, தங்கை,
உற்றார், உறவினர், தோழர்கள்.
(219)

வாரமலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 9-ம் திகதி பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் இந்து பண்பாடு – சிலசிந்தனைகள் என்ற தலைப்பில் நிகழ்த்திய லீலாவதி ராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரையிலிருந்து ஒரு பகுதி.

# இந்து தத்துவ விசாரணையின் நோக்கம் உண்மையை அனுபவத்திற்குக் கொண்டு வருதல்

**பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்**

சமயமும் தத்துவமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வன. இவையிரண்டும் இணைந்து இணையும் சிறப்பு இந்துப் பண்பாட்டுக்கே உரியது. சமயம், நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இவ்வடிப்படை, உலகச் சமயங்களெல்லாவற்றுக்குமே பொதுவானது. தெய்வத்தை ஊனக் கண்ணால் காணமுடியாத நிலையில் தெய்வம் உண்டென்ற நம்பிக்கை, தெய்வத்தின் பேராற்றலில் நம்பிக்கை, தெய்வத் திருவருளாலேயே எல்லாம் நிகழ்கின்றன; தெய்வத்தாலேயே எமக்கு எல்லாவிதமான உய்வும் உண்டு'' என்ற நம்பிக்கை, தெய்வத்தைவிட வேறு புகலிடமில்லை என்பதில் உறுதிப்பாடு, ஆகியன சமயங்களெல்லாவற்றுக்கும் வேண்டப்படும் பொது அமிசங்கள்.

இந்நிலையில், சமயம், இறைவனை அணுகவும் அவன் திருவருளைப் பெறவும்வல்ல உபாயங்களை வழங்கித் தன் எல்லைக்குள் நின்று உரியவாறு வழிகாட்டும் தெய்வம் பற்றிய பல விபரங்களை எங்கள் நிலைக்கேற்ப, இந்திரியங்களால் கிரகிக்கக் கூடிய வகையிலும், அகக் கண்ணால் காணுமாற்றலற்றவர்க்குப் புறக் கண்ணால் கண்டனுபவிக்கக் கூடிய திருவுருவங்களாகவோ, ஓவியங்களாகவோ வடிவம் தந்து, கண்ணால் நேரே பார்க்கவும், வழிபடவும், கூடிய வகையிலும் வாய்ப்புக்களை இந்து சமயம் அமைத்துள்ளது. தெய்வங்களின் குணதிசயங்களையும் குணதிசயங்களுடன் தொடர்பு கொண்ட செயல்களையும் விவரித்துத் தெய்வங்களை நெருங்கி உணரும் வகையில் தெய்வீக நிகழ்ச்சிகளை வருணிக்கும் திறமை இந்து சமயத்துக்கே உண்டு. இத்திறமை, இதிகாச புராணங்களில் விளங்கக் காணலாம். சமயம் அநுட்டானத்திலேயே வெளிப்படுவது. இவ்வநுட்டானங்களை முன்னோர் கையாண்ட வழியில் நின்று கடைப்பிடித்தல் எளிது.

## தத்துவங்களும் உட்பொருளும்

சமயங்காட்டும் இறைவன் பற்றிய விவரங்கள், படிப்படியாகக் கிரகிக்க முடியாத நிலையை அடைவதையும், சமயநூல்களில் உணரமுடிகின்றது இந்நிலையே தத்துவ சிந்தனை பிறப்பதற்கு வழிகோலுவது எனலாம். சமய நிலை நின்று அநுபவம் வளர்த்துக் கொண்டவர்களுக்குத் தத்துவ விளக்கங்களும், உட்பொருள்களும் படிப்படியாகத் தானே தெளிவாகும். ஆழ்ந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நுண்ணறிவும் சிந்தனைகளை ஓடவிடுவதன் மூலம் கூறப்படும். பொருளைப் பல கோணங்களிலிருந்து நோக்கிச் சிந்திக்கும் வாய்ப்பும், ஏற்படும். தத்துவ சிந்தனையின் எல்லைக்குள் நுழையும்பொழுது தத்துவ விசாரணையின் ஆரம்பக் கட்டத்தில் காலெடுத்து வைக்க நேரிடும். விசாரணைத் தொடக்கத்தின் அறிதுறி சந்தேகம். சந்தேகத்தின் விளைவு கேள்விகள். சந்தேகம் இல்லையென்ன், கேள்விக்கே இடமில்லை சமயநிலை நிற்கும் பொழுது, நம்பிக்கை அடித்தளத்தில் பரந்து படர்ந்து விளங்குவதனால், சந்தேகத்திற்கும் எனவே, கேள்விகளுக்கும் இடமே இல்லை: இறைவனுளன் என்பது உண்மை நிலையாயினும் அந்த உண்மை நன்கு தெரிந்த தொன்றாயினும் அவ்வுண்மை நிலையினை உறுதிப்படுத்தும் முகமாக, அவ்வுண்மை பற்றிப் பல சந்தேகங்களைப் பிறப்பித்துப் படிப்படியாக அவற்றைக்களையும் பொழுது, உண்மை. அனுபவத்தின் பாற்படும். இவ்வாறு உண்மையை அனுபவத்திற்குக் கொண்டுவருவதே இந்து தத்துவ விசாரணையின் நோக்கம்.

சமய குரவர்களருளிய தேவார திருவாசகங்களிலும் இறைவனது தடத்த இலக்கணமும் விரிவிவரக் காணலாம். அங்கு சமயம் பேசும் நிலையில் தத்துவமும், தத்துவம் பேசும் நிலையில் சமயமும், மாறி மாறி இணைந்து வருவதனால், ஒன்றை ஒன்று வளம் படுத்திநிற்பதைக் காண்கின்றோம்.

மேல் நாட்டிலோவெனின், தத்துவமும் சமயமும் இருதுருவங்களாகி, ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்கக் காண்கிறோம். மேல்நாட்டிலும், பெரும்பாலான சமயங்களில் தத்துவஞானி, தெய்வ நிந்தகனாக, சமய விரோதியாகக் கருதப்படுவன்.

தருக்க ரீதியாக உண்மை பற்றி விசாரணை செய்வனவே இந்து தரிசனங்கள் இவை, சாங்கியம், நியாயம் யோகம். வைசேடிகம் பூர்வமீமாம்சை, உத்தர மீமாம்சை எனப்பெயர் பெறுவன. இவற்றுள் பூர்வமீமாம்சையும் உத்தர மீமாம்சை எனப்படும் வேதாந்தமும் நன்கு வாதிட்டுத் தருக்க ரீதியாக முடிவுநிறுவும் நிலையிலும் சுருதிப் பிரமாணத்திற்கே உயரிய இடமளித்து, 'ஆப்தவசனம்', 'சப்தம்', என்ற பிரமாணங்களையே பகம்மிக்க சான்றுளாகக் கருதுவன தத்துவ விசாரணை அமைப்பிலும் சமய பாரம்பரியம் சுவறிச், சமயமும், தத்துவமும் இயைந்து இணையும் அபூர்வநிலை இந்துக்களின் தத்துவ விசாரணை முறையை, வேறுபடுத்தி, அதற்கு ஒரு தனித்துவத்தை உரியதாக்குகின்றது இந்துக்களின் பாரம்பரியத்தில், சமயமும் தத்துவமும் பிரிக்கவொண்ணாது இணைந்து நிற்பதைத், தொன்றுதொட்டு இன்றுவரை அவதானிக்கமுடிகின்றது.

## "கதவின் ஒலி'

வீடுகளில் கதவின் ஒலியும் ஏதோ ஒரு வகையில் ''ஜோஸ்யம்'' சொல்லும் கழுதைக்குரல் போலும் செக்கின் ஓசையைப் போலும் கதவுகள் ஓசையை எழுப்பினால் தீராக்கவலையனை பிளிறுவதைப் போலும், சங்கிலி யொலி போலும் இசைந்தால் சகல பாக்கியமுண்டு. கிளியைப் போல கீச்சென்ற ஒலியுண்டாயின் வீட்டிற்கு உடையவனுக்கு நோயுண்டு. அவலஸ்சுரம் போல் இசைத்தால் புத்திரபாக்கியமில்லை மனைவிக்கு ஆபத்து மனக் கவலையுண்டு

—ஜோஸ்யர் சச்சின்

## வேண்டாத நிழல்

வெயிலின்
வெப்பத்தால் தான்
நிழலைத் தேடுகின்றோம்
ஆனால்
பனை நிழல்
வேண்டோம்

'கேசரி'

## பேச்சுவார்த்தையும் தும்மலும்

''பேச்சுவார்த்தை வெல்லும்... என்றேன்,
'ஆச்சும் ! என்றேன் தும்மிநீர் காணும்!
ஏச்சுவார்த்தைகள் இடைக்கிடை கேட்கினும்
பேச்சுவார்த்தை
இறுதியில் வெல்லும், எமக்குக் கொஞ்சம்
பொறுதியும் வேணும்! எங்கடை 'காணி'யை
அறுதியாய் எழுதி உறுதியும் முடிப்பம்...!
நேசையா பிறகும் தும்மிநீர்?''

''வெறி சொறி
நாசங்கெட்டின ஈசனே பீலியை''

— சத்தியசிலன்

## முருகனடியார் முழக்கம்

மாலைப்பொழுது. தேர் ஓடும் திருவீதியில், பரந்த நிலப்பரப்பில் பவனிவரும் நல்லூர் முருகனை அளவு கடந்த அடியார் கூட்டம் சந்திக்கும் வாய்ப்பு, இவ்வருட மகோற்சவத்தின் புதுமை.

நல்லூர் கொடியேறினால், திருத்தொண்டர்படை எங்கிருந்தெல்லாம் திரண்டெழுவது வழக்கம்.

மக்கள் நெரிசலால் நலிவுற்ற காலம் போய், அடியார் கூட்டம் மிக அமைதியாகப் பக்திப் பரவசத்தில் தம்மை மறந்துவழிபடும் வாய்ப்பு, இன்று கிடைத்திருக்கிறது.

கண்ணினைக்கவரும் அழகையும் கருத்தினைக்கவரும் அறிவையும் தெய்வ நலன்களாக வழிபட்டுவந்த தமிழ் மக்கள், இன்று இந்த நாட்டில் என்றும் காணாத கொடுமைகள் மத்தியில் வாழ்ந்து மடிகின்றனர்; உயிர் தப்பி ஏக்கத்துடன் வாடிவதங்கி சுமையற்ற தோலின் பாவைகள் போல் நடமாடுகின்றனர்.

வீரமும் வெற்றியும் இளமையும் அழகும் முருக வழிபாட்டின் சிறப்புப் பண்புகள் என்பது. பழந்தமிழர் கொள்கை.

''அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே'' என்று ஆங்கிலக்கவிஞர் கீட்ஸ் அருளியிருப்பதை பழங்காலத் தமிழர் முருகவழிபாட்டில் பார்க்கிறோம்: அன்று தொட்டு இன்று வரைக்கும் எந்த இன்னல் மத்தியிலும் இந்த ஆனந்தத்தைக் காண்பவர் தமிழர்.

முருகன் ஒரு விளையாட்டுப்பிள்ளை. ஆனால் பாலனென்று எண்ணிய சூரனைச் சங்கரித்த வீரன்.

''அடியார் படும் துன்பத்தை அறியாதவர்போல் இருக்கின்றீரே'' என்பது போல், நல்லூரில் நடைபெறும் பிரார்த்தனைகளும் பஜனைகளும் வானைப்பிளக்கின்றன.

''தொண்டர் தம்பெருமை சொல்லவும் அரிதே''

## கலிபோர்னியா அப்பிளைச் சாப்பிடமாட்டோம்!

அமெரிக்கநாட்டின் மேற்குக் கரையோரப் பகுதியில் இருக்கின்ற கலிபோர்னியா மாநிலத்தில் அப்பிள் பழ உற்பத்தி மிகவும் அதிகமாகவுள்ளது அங்கிருந்துதான். அமெரிக்காவின் ஏனைய மாநிலங்களுக்கு அப்பிள் பழங்கள் பெருந் தொகையாகக் கொள்வனவு செய்யப்பட்டு அனுப்பப்படுவது வழக்கம்.

கலிபோர்னியா அப்பிள் பழத்தின் உருசி தனி வகையாகும். அமெரிக்கர்களுக்கு இந்த அப்பிள் பழத்தின் மீது பெரும் விருப்பம்.

இங்கு ஒரு டாலருக்குக் குறைந்தது ஐந்து அப்பிள் பழங்களை வாங்கலாம். அமெரிக்காவில் அப்பிள் பழங்களை 90வீதமான மக்கள் உண்பார்கள்.

''அப்பிள் தொழிலாளர்களுக்கு வசதி வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படும்வரை கலிபோர்னியாவில் இருந்து அனுப்பப்படுகின்ற அப்பிள் பழங்களை, அமெரிக்கமக்கள் சாப்பிடாமல் பகிஷ்கரிப்புச் செய்ய வேண்டும். இதன்மூலம் கஷ்டமுறும் அப்பிள்பழ உற்பத்தி தொழிலாளர்களின் கோரிக்கைக்கு ஆதரவளியுங்கள்'' என்று தொழிற்சங்கங்கள் பொதுவேண்டுகோள்விடுத்துள்ளன.

அதேவேளை, பல மாநிலங்களிலும், இந்தவகையான வேண்டுகோளுக்கு மக்கள் மத்தியில் நல்ல ஆதரவு பெருகி வருகின்றது.

நான் எனது வீட்டுக்கு கலிபோர்னியா அப்பிள் பழங்களைக் கொள்வனவு செய்யமாட்டேன்சாப்பிடமாட்டேன்

அப்பிள் பழத்தோட்டங்களில் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் அவர்களது வாழ்க்கையை நடாத்தப் போதாமல் உள்ளது மருத்துவ, சமுதாய வசதிகள், வாய்ப்புகள் நாட்டில் இருக்கின்ற ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதிலும் பார்க்க மிகவும் குறைந்ததாகவேயுள்ளது. நிரந்தர வசிப்பிடத்துக்கு வீட்டு வசதிகள் செய்து தரப்படவில்லை இக்காரணங்களினால். பல்லாயிரம் உற்பத்தித் தொழிலாளர் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள்.

இதேவேளை. அப்பிள் பழத் தோட்டங்களின் உரிமையாளர்கள் பலகோடி டாலர்களைச் சம்பாதிக்கின்றனர். உற்பத்தி தொழிலாளர்களின் கஷ்ட நஷ்டங்கள் பற்றியோ, அல்லது அவர்களது வசதியான வாழ்க்கைகள் பற்றியோ, இத்தோட்ட உரிமையாளர்கள் எவ்வித கவனமும் நடவடிக்கையும் எடுக்கவில்லையென அப்பிள் தோட்டங்களில் பணியாற்றுபவர்களின் நலன்களில் அக்கறையுள்ளதாகக் கருதப்படுகின்ற தொழிலாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

எனும் உறுதிமொழியைப் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்கள் விசேடமாகப் பெண்மணிகள் ஏற்றுக் கையொப்பமிட்டுள்ளனர்

சுப்பர் மார்க்கட்டுகளில் கலிபோர்னியா அப்பிள் பழங்கள் முன்புபோல இக்காலத்தில் விலைப்படாமல் இருக்கின்றன. மக்கள் இப்போது கலி

**கு. ஜீவகதாஸ்**

போர்னியா தவிர்ந்த ஏனைய இடங்களில் உற்பத்தியாகின்ற அப்பிள் பழங்களையே தேடிக் கொள்வனவு செய்கின்றனர்.

அமெரிக்காவில் சராசரி வருடாந்த அப்பிள்பழ உற்பத்தியில் 75 வீதமான அப்பிள் பழங்கள் கலிபோர்னியாவில் உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிகின்றது

கலிபோர்னியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற அப்பிள் பழங்களைக் கொள்வனவு செய்கின்ற பெரும் சுப்பர் மார்க்கட்நிறுவனங்கள் அப்பிள் பழத் தோட்டத்தில் உற்பத்தி தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்றவர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க வேண்

(10-ம் பக்கம் பார்க்க)

[சென்றவாரத் தொடர்ச்சி]

பயங்கரவாத இயக்கங்களில் தற்கொலைப்படைப் பிரிவு ஒன்று இருப்பதுபற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். தங்களைத்தாங்களே அழித்துக் கொண்டு தங்கள் இலக்குகளையும் அழித்துவிடுவதே அவர்களுடைய நோக்கமாகும் இப்படியானவர்கள் விடயத்தில் தான் மிக மிகவிழிப்பாக இருக்கவேண்டும். இவர்கள் விமானத்தில் ஏறிவிட்டால் அவ்வளவு தான். விமானத்தில் உள்ள எல்லோருமே எமலோகம் போகவேண்டிவரும்.

நிலையங்களைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படுவர்.

மத்திய கிழக்கிலிருந்தும், ஏதென்சிலிருந்தும் வந்திறங்கும் சகல விமானங்களையும் பெய்ரோவில் ஆயுதப்படையினர் தற்போது தீவிரமாகப் பரிசோதித்துவருகின்றனர். விமானத்துக்குள் வைத்தே பல பிரயாணிகள் தீவிரமாக சோதிக்கப்படுகின்றனர். விமான நிலையத்தின் ஓடு பாதையில் வைத்தே பயணிகள் தங்கள் பொதிகளை ஆயுதப்படையினருக்கு அடையாளம் காட்டவேண்டும். அதன்

● விமானச்சதிகளுக்கு ஆப்புவைக்கும் முயற்சி

# விமான நிலையங்களுக்கு பெருந்தொகைப் பணம் செலவேற்படும்

பெஞ்சமின் இராசரத்தினம்

இவர்களைக் கண்டுபிடிப்பதற்கென ஏற்கனவே பரிசோதனை செய்யப்பட்ட 'யாக்'குகள் யாவும் எக்ஸ்ரே கருவிகளுக்கூடாகவும், குண்டுகளைமோப்பம் பிடிக்கும் விசேஷ சாதனங்களின் ஊடாகவும் செலுத்தப்படும். இதேபோல் விமானத்துக்குள் ஏற்றப்படும் பொதிகள், உணவுவகைகள் யாவும் இந்த விதமான கடும்பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும்.

## நுணுக்கமான பரிசோதனை

விமானங்களிலிருந்து இறக்கப்படும் பொதிகளும் கவனமான பரிசோதனைக்கு உள்ளாக்கப்படும். ஏனைய விமான நிலையங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவீனமாக இருக்கும் பட்சத்தில் ஆபத்தான பொதிகள் வருவதற்கு இடமுண்டல்லவா! அண்மையில் டோக்கியோவிலுள்ள நரீடா விமானநிலையத்தில் ஏற்பட்டகுண்டு வெடிப்புச்சம்பவம் இதற்கு நல்ல ஒரு உதாரணம். இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காகவே வெளியிலிருந்து வரும் பொதிகள் யாவும் கவனமாகப் பரிசோதிக்கப்பட உள்ளன.

விமானங்களிலிருந்துஇறங்கி வரும் பயணிகள் விமானங்களில் ஏறப்போகும் பயணிகளுடன் கலந்து போகாத வண்ணம் பாதுகாப்புப்படையினர் விழிப்புடன் அவதானித்துக் கொண்டிருப்பார்கள். வெளியிலிருந்து வரும் பயணிகள்கூட கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டபிறகே விமான

பிறகே வைவமறுபரிசோதனைக்காக பொதிகள் களஞ்சியப் பகுதிக்கு கொண்டுசெல்லப்படுகின்றன.

## விமானப் பாதுகாப்பு

விமானங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. விமானத்துக்குள் ஆயுதங்களும், வெடிமருந்து வகைகளும் திருட்டுத்தனமாக மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பது குறித்து பரிசோதிக்கப்படும். இதற்கென விமானசிப்பந்திகளுக்கு விசேஷ பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்புப்படையினரின் உதவியுடன் இவர்கள் இந்தக் கடமையைச் செய்வார்கள். விமானங்களில் பொதிகள்வைக்கும் பகுதியில் வெடிகுண்டு விபத்துக்கள் ஏற்படும்பட்சத்தில் விமானத்துக்கு சேதமேற்படாத விதத்தில் வெடிகுண்டுகளை வெளியே சிதறச்செய்வதற்கு விமானத்தில் விசேஷ அமைப்புக்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

## சமிக்ஞை ஒலி

இத்தத்திட்டங்களில் சில வற்றை அமூல்செய்வதற்குப் பல வருடங்கள் பிடிக்கலாம். எனினும் வளர்ச்சியடைந்த தொழில் நுட்பமுறைகள் மூலம் இவற்றுக்குச் சமமான பாதுகாப்பு நடவடிக்கைகளை சில விமானநிலையங்கள் மேற்கொண்டுவருகின்றன. பிரிட்டனைச் சேர்ந்த ஏரோஸ்பேஸ் ஸ்தாபனம் இரண்டுகோடி அமெரிக்கடொலர் செலவில் பொதிகள் கண்காணிப்பு இயந்திரம் ஒன்றை விசேஷமாக உருவாக்கியிருக்கிறது.

கொள்கலன்கள், பொதிகள் ஆகியவற்றுக்குள் இருக்கும் வாயுவை இந்த இயந்திரம் கவனமாகப் பரிசோதனை செய்யும் சக்திபடைத்தது. அவற்றுக்குள் சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் இருந்தால் உடனே அந்தச்சாதனம் சமிக்ஞை ஒலி எழுப்பும்.

சில விமானநிலையங்களில் பொதிகளைப் பரிசோதனை செய்வதற்காக அவை பவன அமுக்க மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. பொதிகளுக்குள் குண்டுகள் இருந்தால அவை வெடிக்காமல் அவற்றை செயலிழக்கச்செய்வதற்காகவே இந்த நுணுக்கமான பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

மனிதனுடைய உடம்பின் உள் உறுப்புக்களை நுணுக்கமாக ஆராய்வதற்கு மருத்துவ நிபுணர்கள் அனல் அணு முறையைப் பயன்படுத்துவதுண்டு. இதே முறையைப் பயன்படுத்தி புதிய தொழில் நுட்பமுறைகள் மூலம் விமானப் பயணிகளையும் பரிசோதிப்பதற்குத் தேவையான நவீன சாதனங்களைக் கண்டு பிடிப்பதில் பொறியியல்வல்லுநர்கள் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விமானத்தின் பவன அமுக்கப்பிரிவுக்குள், வெடிகுண்டுகளை மணந்து பிடிக்கும் சாதனங்களைப் பொருத்துவதற்கான ஆய்வுகளை ஆராய்ச்சியாளர்கள் தற்போது மேற்கொண்டுவருகின்றனர். வெடிமருந்துகள் விமானத்துக்குள் இருக்கும் பட்சத்தில், விமானம் புறப்படுவதற்கு முன் இந்தச் சாதனம் சமிக்ஞை ஒலி எழுப்பி விமான ஓட்டிக்கு அதனை அறிவித்துவிடும்.

அவ்வளவுதான் நவீன தொழில்நுட்ப உத்திகளை அறிமுகப்படுத்தினாலும் விமான நிலையங்களில் இருக்கும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மிகவும் விழிப்பாகவே இருக்க வேண்டும். எக்ஸ்ரே சாதனங்களின் அருகே இருக்கும் பாதுகாப்பு அதிகாரிகள் விரைவில் களைப்படைந்து விடுவதால் இருபது நிமிடங்களுக்கு மாத்திரமே அவர்கள் சுறுசுறுப்பாக இருப்பதாக ஆய்வுகள்மூலம் தெரியவந்திருக்கிறது.

## கட்டண அதிகரிப்பு நேரதாமதம்

இப்படியான பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வது இலகுவான காரியமல்ல இவற்றுக்கு அதிகளவு மனித சக்தியும் நவீன சாதனங்களும் தேவைப்படும்இதனால் விமான நிலையங்களின் பராமரிப்புச் செலவுகள் பெருமளவு அதிகரிக்க இடமுண்டு. இவற்றை விமானக்கம்பெனிகளிடமிருந்து தான் அறவிடவேண்டிய நிலை ஏற்படும். இதன் காரணமாக விமானக்கட்டணங்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கும். பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகமாக இருப்பதால் விமானங்கள் புறப்படுவதற்கான நேரங்களிலும் தாமதம் ஏற்படும்.

விமானச்சேவைத் துறையை முடமாக்காமல் விமான நிலையங்களில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை செயலிழக்கச் செய்வதே தற்போது பெரிய சவாலாக உள்ளது. சுதந்திரமான பிரயாணத்துக்கும் கச்சிதமான பாதுகாப்புக்கும் இடையில் ஒரு சம நிலை இருக்கவேண்டும். விமான நிலையங்களை ஆயுத முகாம்களாக மாற்றியமைத்தால் பயங்கரவாதிகள் தங்கள் போராட்டத்தில் வெற்றி யடைந்தவர்களாவர் என்று சர்வதேச விமானசேவை நிறுவனங்கள் கருதுகின்றன.

# அண்டினோர்க்கருள்பவன்

ஒட்டக உரோமத்தை உடையாகக் கொண்டவா,
உண்மையினைச் திண்மையுடனே
ஒதியே சேசுவின் பாதையினைச் சீர்செய்ய
உலகுக்கு வந்தமுனி வா,
கட்டிய செருப்பினைத் தொட்டவிழ்த்திடத்தானும்
காணுதென் தகுதி என்றே
கர்த்தனும் யேசுவின் பெருமையைப் பேசிய
உத்தமயுவானே யாரே!......
எட்டிகளை வெட்டியே தீயினில் போடுவரர்
இறைவன் என்றெச்சரித்தே,
எல்லோரும் தவஞ்செய்து நல்லோராவீர் என
ஏற்றவழி காட்டினீரே!......
கட்டி உன்கால்களைப் பிடித்திட்ட அடியாரைக்
கடைக்கணித் தாளுமையா,
கர்த்தனும் யேசுவுக்கே ஞானஸ் நானமதைக்
கையாலே கொடுத்ததுய்யா.

அந்தோனிப் பண்டிதர்
அல்லைப்பிட்டி

★ அல்லைப்பிட்டி யுவானியார் திருநாளை முன்னிட்டு

## மழையைநோக்கி

வருண பகவான்
வரவிற்காக
வயல்கள் மட்டு மல்ல
எங்கள் ஓலைக்
குடிசைகளும்
காத்திருக்கின்றன

'கேசரி'

நாளை மறுதினம் அன்னை துர்க்காதேவி ரதபவனி

# மகான்களின் ஆசிபெற்றுச் சிறப்புற்ற ஆலயம்

எங்கு தர்மம் இருக்கின்றதோ அங்குதான் வெற்றி என்பது மகாபாரதக் கதை. தர்மத்திலிருந்து தான் பொருள், இன்பம் முதலிய அனைத்தும் விளைகின்றன. நம் நாட்டில் இத்தகைய தர்மத்தைப் போற்றி திருக்கோயிற் கடமைகளை உள்ளத்தில் ஏற்றி அரும்பணி ஆற்றுபவர்கள் ஒரு சிலர் இருப்பது நாடு செய்த தவப்பயனாகும்.


திருக்கோயில்கள், அன்ன சத்திரங்கள், பொதுக்கிணறுகள், இலவசக் கல்விக்கூடங்கள், வைத்தியசாலைகள், தர்மஸ்தாபனங்கள் யாவும் இவ்வுண்மையை எடுத்துக்கூறுகின்றன. ஒவ்வொரு தர்மத்திலும் எப்படியாவது தமது பங்கும் இருக்கவேண்டுமென்று பலர் விரும்புவதுண்டு. 'தர்மம்' என்றசொல் பலவித பொருள்களைக்கொண்டது. பொது

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம், தெல்லிப்பழை

வாக வேதங்களும் அவற்றைத் தழுவிய நூல்களும் 'எதைச் செய்' என விதிக்கின்றனவோ அவைதான் தர்மம். எதைச் செய்யாதே என விதிக்கின்றனவோ அவைதான் அதர்மம்.

தர்மகாரியங்களுள்ள மிக உயர்ந்ததாகப் போற்றப்படுவது திருக்கோயில் கட்டுவதும் திருப்பணிகள் செய்தலுமாகும். இவற்றை ஒரு தனிப்பட்டவர் எளிதில் செய்ய இயலாது- மகாசக்தி வாய்ந்த மகான்களாலும், தெய்வ உள்ளம் படைத்த மாமன்னர்களாலும் இவை செய்யக் கூடியவை என்பது அனைவரும் அறிந்ததே.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வரலாறும் மகான்களின் ஆசிபெற்ற சிறப்பைப் பெற்றது கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய பழைமை வாய்ந்த தலங்களுடன் தொடர்புபட்ட பூர்வீகம் இவ்வாலயத்துக்கு உண்டு. பத்தாண்டுகள் காசியி



லிருந்து துர்க்கை அம்மனை உபாசனை புரிந்த ஒரு பெருஞானியால் ஆதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் இது. கொழும்புத்துறை முனிவர் தவயோக சுவாமிகளின் நல்வரவுக்கு இடமளித்த ஆலயம். ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமிகளின் அபிமான க்ஷேத்திரம். இன்னும் பல ஆத்மீக சக்திகளால் பொலிவுபெற்ற இக்கோயில் இன்று பல்லாயிரக்கணக்கான மக்களின் வருகையாலும், வழிபாட்டாலும் சிறப்புப் பெற்றுள்ளது. இங்கு வருகை தரும் இலட்சோப லட்சம் மக்களின் ஆதரவு திரண்டு பல புண்ணிய கருமங்களையும் செய்வதற்கு வாய்ப்புக்கிட்டியுள்ளது.

அன்னையின் திருக்கோயில் தனது சின்னமாக வானுயர் கோபுரத்தைக் கொண்டு மிளிரும் காட்சி, 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் நினைக்கத்தோன்றுகின்றது.

"கோபுரஞ்சூழ் மணிமாடக்
கோயில் கண்டேன்
குளித்தபல் அலங்கார
வளைவுகண்டேன்
தேவர்களும் உவந்தேத்தும்
ஸ்தூபி கண்டேன்
திருமறைகள் வேதமொடு
ஒலிக்கக்கண்டேன்
ஏவல்புரி ஏத்திழையார்
எழிலும் கண்டேன்
இளைஞர்பணி சரிவைவழி
இயற்றக்கண்டேன்

(9-ம் பக்கம் பார்க்க)


பெற்று எசன்ஸ் சப்ளையேர்ஸ்
(Pettah Essence Suppliers)

✶ பேக்கரி தயாரிப்புகள்
✶ பிஸ்கற், ரொபி, இனிப்பு
✶ குளிர்பானம், ஐஸ்கிரீம்
சிற்றுண்டி வகைகளுக்கான

சகலவிதமான எசன்ஸ் கலர்பவுடர்,
கேக் தயாரிப்புக்கு தேவையான
சகல பொருட்களுக்கும்

ஊதுபத்தி - சாம்பிராணி - விளவு சூடம் - ரஸ்கம்பவுடர் - வாசனைத் திரவிய எண்ணை ஓடிக்கொலோன் - ஆகியவை தயாரிப்பதற்கான

உற்பத்திப் பொருட்களுக்கும்
ஏனைய இதர

பேப்பர்வகை, பொக்ஸ்போட், காட்போட், ஆற்போட், நியூஸ்பேப்பர், ஒயில்பேப்பர், பிரவுண்பேப்பர், ரிசுபேப்பர், சலபின், எல்லாவகையான பொலித்தீன் வகைகளுக்கும்-

இன்றே விஜயம் செய்யுங்கள்

223, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(Power House Road JAFFNA)

# குறுநாவல்

யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு' பத்திரிகையும் இணைந்து நடாத்திய இரசிகமணி கனக. செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற குறுநாவல்.




விமானம் தரையில் ஓடு பாதையில் மெதுவாக ஊர்ந்து பின்னர் நேராக விரைந்து உறுமிக்கொண்டே மெல்ல மெல்ல உயரக்கிளம்பியது. மூன்று ஆசனத்தில் இருந்த சங்கர் அழகான வேலைப்பாடுகளுடனான அந்த மெல்லிய திரைச் சீலையை விலக்கிவிட்டு வட்டமான கண்ணாடி ஜன்னலூடே வெளியே எட்டிப் பார்த்தான். கட்டுநாயக்கா விமான நிலையத்தின் அருகே தென்னந்தோட்டுக்குள் முள்ளு வேலிகளுக்கும் தடைகளுக்கும் அப்பால் பிரயாணிகளை வழியனுப்ப வந்தவர்கள் இப்போது சிறு பூச்சிகளைப்போலத் தெரிய ஆரம்பித்தார்கள். சாய்வாக உயரப் பறந்த விமானம் இப்போது நேராக மிதக்கத் தொடங்கியது.

சங்கருக்கு விமானப் பயணம் புது அனுபவம். சிவப்பு விளக்குகளினூடே வந்த சமிக்ஞைகளின்படி இடுப்புப் பெல்டை இறுக்கிப் பூட்டியிருந்த அவன் இப்போது அதை அவிழ்க்கத் தெரியாமல் திண்டாடுவதைக் கண்ட பணிப்பெண் அவனது உதவிக்கு வந்தாள். நீல நிற அமெரிக்கன் ஜோர்ஜெட் சாறியில் கரைகளுக்கு அழகான கட்டம் போட்ட பூவேலைப் பாடுகளுடன் அப்பெண் தேவலோகத்து அழகிகளைப்போன்று அவனுக்குக் காட்சியளித்தாள். தேவலோகத்து அழகிகளை அவன் நேரில் கண்டிராவிட்டாலும் கதைகளிலும், சினிமாக்களிலும் நிறைய அறிந்திருக்கிறான். அவளைப்போன்ற இன்னும் ஐந்தாறு பெண்களும் மூன்று ஆண்களும் விமானத்திற்குள் அங்கும் இங்கும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

மூன்று பணிப்பெண்கள் சுமார் இருபதடி இடைவெளி தூரத்தில் நேரடியாக நின்றுகொண்டு விபத்து நேர்ந்தால் இருக்கையின் அடியில் உள்ள உயிர்காப்புச் சாதனத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்று விளக்கிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் ஓரேஞ் ஜூஸ் எல்லோருக்கும் கொடுத்தார்கள். அதோடு எல்லோருடைய இருக்கைகளின் முன்பாக உள்ள தற்காலிக மேசைகளில் அழகாக அச்சிட்ட கார்ட் ஒவ்வொன்றையும் வைத்தார்கள். ஒவ்வொரு இருக்கையின் பின்னாலும் மடித்து விரிக்கக்கூடிய சிறு தட்டுகள் இருந்தன. தேவையான போது இவற்றை மேசையாகப் பாவிக்கலாம். சங்கர் ஜி. சி. ஈ. அட்வான்ஸ் லெவல் வரைக்கும் படித்திருக்கிறான். ஆங்கிலம் நன்றாக வாசிப்பான். ஆவலோடு அந்தக் கார்ட்டைப் பிரித்துப் படித்தான். விமானத்தில் வழங்கப்படும் மேல்நாட்டுக் குடிவகைகளின் பெயர்கள்தான் அங்கு காணப்பட்டன. சங்கரோடு குவைத்துக்குப் பயணமான மற்ற யாழ்ப்பாணத்து நண்பர்களைப் பார்த்தான். சிலர் பணிப்பெண்களிடம் பியர், விஸ்கி என்று ஓடர் செய்து வாங்கிக் குடித்தார்கள். சங்கர் ஊரில் இந்தப் பழக்கங்களுக்கு அடிமையாகாதவன். அருகில் இருந்த அந்தோனி உற்சாகப்படுத்தினான்.

'நாங்கள் ரிக்கற்றுக்குக் குடுக்கிற காசுக்கு இதெல்லாம் சும்மாதான் மச்சான். காசில்லை இதெல்லாம் இலங்கையில் வாங்கிறதெண்டால் மனம் வராது நீயும் பாவிச்சுப்பார் சங்கர்' அந்தோனி! தயவு செய்து என்னைக் குழப்பாதை. எனக்கு ஒறேஞ்ஜூஸ் போதும் நீ வேணுமெண்டால் வாங்கிக் குடி'

அந்தோனி அவனைக் கட்டாயப் படுத்தவில்லை. அப்சரஸ் போன்ற அழகான பணிப்பெண் ஒருத்தி அன்னம்போல அவனருகே நடைபயின்றுவந்து பூவேலைப்பாடுகள் நிறைந்த மேல் நாட்டுக் கிளாசில் அவனுக்கு விஸ்கியை ஊற்றிக் கொடுத்தாள். கூடவே சிறிது ஐஸ் கட்டியையும் போட்டுக் கலக்கிக்கொடுத்தாள்.

'ஓ மை கோட்... இந்த ஒரு கட்டத்திற்கு மட்டும் பத்தாயிரம் குடுக்கலாம் மச்சான்... ஏஜன்சிக்கு இருபத்திரண்டு கட்டினாலும் பரவாயில்லை'.

அந்தோனி கொஞ்சம் விஸ்கி உள்ளே ஏறியதும் பிதற்ற ஆரம்பித்தான். சங்கருக்கு அவனைக் காண எரிச்சலாக வந்தது. இருபத்திரண்டாயிரம் கொடுத்ததை எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டான் என்னுடைய மூன்று பெண் சகோதரங்களின் கழுத்திலும் காதுகளிலும் இருந்த நகைகளை அடைவு வைத்தல்லவா அவன் காசு புரட்டினான். ஊரிலே கமஞ் செய்வதற்குக் காணியில்லை என்பதால் தகப்பனுடன் விஸ்வமடு குளத்தில் குத்தகைக்குக் காணி எடுத்துக் கமஞ்செய்யப்போனதும் மழை தண்ணி இல்லாமல் மிளகாய்ச் செடிகள் காய்ந்து பெருத்த நஷ்டம் ஏற்பட்டதும் வயதான தகப்பனாரைக் கமத்திற்குக் காவல் வைத்துவிட்டு ஊருக்கு வந்தபோது ஒருநாள் இரவு அவனது கொட்டிலுக்கு யானை வந்து அவரை அடித்துக் கொன்றதும் எல்லா இழப்புக்களையும் ஈடு செய்வதற்காக அவன் வெளிநாடு போவதற்காக இரண்டு வருஷங்களாக நாயாக அலைந்ததும் ஆரம்பத்தில் கொழும்பில் ஒரு ஏஜன்சியிடம் ஐயாயிரம் அட்வான்ஸ் கொடுத்து ஏமாந்ததும் பிறகு இப்ப இருபத்திரண்டாயிரம் கொடுத்து ஒருவாறு பிளேன் ஏறியதும் எல்லாம் ஒவ்வொன்றாக அவன் மனத்திரையில் வந்துபோயின. குவைத் போகவென்று மூன்று தடவைகள் ஆயத்தமாகக் கொழும்புக்கு வந்ததும் ஒவ்வொரு தடவையும் ஏஜண்ட் ஏதாவது சாட்டுகளைச் சொல்லி சமாதானப்படுத்தித் திருப்பி அனுப்பினான் ஒரு தடவை 'விசா' வரவில்லை என்றான். இன்னொரு தடவை பிளேனில் டிக்கட் இல்லை என்றான். இன்னொரு தடவை பிளேனில் சீற் இல்லை என்றான் எப்படியோ நாலாவது தடவை மனமிரங்கிப் பிளேன் ஏறச் செய்துவிட்டான் இந்தப் பிரச்சனைகளால் ஒவ்வொரு தடவையும் சங்கர் வீட்டில் இருந்து புறப்படும் பொழுது அலுவலாகக் கொழும்புக்குப் போகிறேன். சிலவேளை சரிவந்தால் அப்படியே வெளிநாடு போய்விடுவேன் என்று சொல்லிக்கொண்டுதான் வருவான். முதல்தடவை கொடிகாமம் வரைக்கும் அவனது தாயாரும் மூன்று சகோதரிகளும் வந்து வழியனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு ஊரில் பஸ் நிலையம் வரைக்குமாவது யாரும் வருவதில்லை.

அந்தோனிக்குக் கொழும்பில் வேலை பார்க்கும் அவனது மச்சான் பயணமனுப்ப வந்திருந்தான். அந்தோனி இப்போது விஸ்கியையும் ஜின்னையும் ஒன்றாக ஊற்றிச் சுடித்துவிட்டு அரை மயக்க நிலையில் இருக்கையில் சாய்ந்திருந்தான்.

சிறு வண்டிலை நகர்த்திக்கொண்டே இரண்டு பணிப்பெண்கள் பிளாஸ்டிக் தட்டுகளில் உணவு பரிமாறிக் கொண்டு வந்தார்கள். கொஞ்சம் சோறு இறைச்சி, முட்டை, இலைக்கறிகள், தக்காளிப்பழம் என்பன இருந்தன புறாட்சலாட்டும் வைத்தார்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே கரண்டிகள், மிளகுத் தூளும், உப்புப் தனித்தனியே பைக்கற்றுகளில் வந்தன. பிளாஸ்டிக் கப்பில் ஐஸ்வாட்டர் வைத்தார்கள். கை, முகம் துடைப்பதற்கு ரிஷ்யூவினால் ஆன ஈரப்பதமையான பேப்பர் ஒன்றையும் மடித்துத் தந்தார்கள். ஆகா! எல்லாவற்றையும் எவ்வளவு அழகாகவும் சுத்தமாகவும் செய்கிறார்கள். இதுவல்லவோ உபசரிக்கும் பண்பு" என்று சங்கர் மனதுக்குள் வியந்தான்.

உணவு சூடாகவும், சுவையாகவும் போதுமானதாகவும் இருந்தது.

"சாப்பிடு மச்சான்.. குடுத்த காசுக்கு நல்லாய்ச் சாப்பிடு... இப்பிடிச் சாப்பாட்டையும் இப்பிடிக் குடியையும் நாங்கள் கண்டிருப்பமே... வீட்டை சம்பலும் சோறும் திண்டிட்டு இஞ்சை...வெள்ளைக்காறன்ரை சாப்பாடு... ம்... சாப்பிடு..." அந்தோனிதான் பிதற்றினான். கரண்டிகளை வைத்துவிட்டு அவன் கையாலேயே எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

விமானத்தில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக இருந்தார்கள். எல்லோரும் பணிப்பெண்களாகச் செல்பவர்கள். பதினெட்டு வயதுமுதல் ஐம்பது வயதுவரை பெண்கள் இருந்தார்கள். கணவன்மாருடன் கோபித்துக்கொண்டு வெளிநாடு செல்பவர்களும், வாழத் தெரியாமல் வாழ்ந்துவிட்டுப் பண்பையும் பணத்தையும் அழித்துவிட்டுப் பிறகும் பணம் தேடிப் புறப்பட்டவர்களும், வறுமையின் கொடுமை தாங்காமல் விருப்பமில்லாமலேயே புறப்பட்டவர்களும், பல்வேறு நோக்கங்களுக்காக விரும்பியே வந்தவர்களும் என்று பல ரகத்தினர் அந்த விமானத்தில் பயணம் செய்தனர் எல்லாரும் ஒரே குடும்பத்தினர் போன்று அங்கும் இங்கும் நடந்துதிரிந்து தெரிந்தவர்களுடனும் நண்பர்களுடனும் அளவளாவினர். ஏற்கனவே அறிமுகமில்லாதவர்களும் சில பெண்களின் அருகே சென்று கதைத்து அறிமுகமாகிக் கொண்டனர் சிலர் விலாசங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

[தொடரும்]

# வெங்காயம் பற்றிய சில உண்மைகள்

ராபர்ட் லூயி ஸ்டீவன்சன் வெங்காயத்தை 'காய்களில் ஒரு ரோஜா' என்று புகழ்ந்துள்ளார்.

வெங்காயம் லில்லி இனத்தைச் சேர்ந்தது என்கிறார்கள் தாவர இயல் விஞ்ஞானிகள்.

வெங்காயத்தில் 500 இனங்களுக்குமேல் இருக்கின்றன.

வெங்காயத்தை சமயல்கட்டு சாம்ராஜ்யத்தை அரசாளும் ராஜா என்றாலும் தகும். எந்தக்காய்கறி இருந்தாலும் இல்லாவிட்டாலும் வெங்காயம் சமையல் அறையில் இருந்தே தீரும். தீரவேண்டும் வெங்காயம் எல்லா நாட்டிலுமே சமையல் கட்டுப் பதார்த்தமாகவோ சட்னியாகவோ, சாம்பாராகவோ, ஊறுகாயாகவோ மற்ற பதார்த்தமாகவோ பரிமளிக்கிறது

ஆசியப் பகுதியில் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே வெங்காயம்கண்டு பிடிக்கப்பட்டது என்கிறார்கள் இதுபற்றி ஆராய்ந்த அறிஞர்கள்.

வெங்காயத்தை ஆங்கிலத்தில் ஆனியன் என்கிறோம் இது இலத்தீன் வார்த்தையான யூனியோ என்பதிலிருந்தும் பிரெஞ்சுசொல்லான ஆனைன் என்பதலிருந்தும் தோன்றியதாகும்.

வெங்காயம் முதன்முதலில் சக்திமிக்க மருத்துவ மூலிகையாகவே அறிமுகம் ஆகியது.

மருத்துவத் தந்தையான உரிப்போகிரெட்ஸ் வெங்காயம் நல்ல கண் பார்வையைப் பெற உதவுவதாகும் என்று நம்பினார்

1596ல் பிரசுரிக்கப்பட்ட சிறந்த மூலிகைகள் என்ற பழைய நூல் ஒன்றில் வெங்காயச்சாறு வழுக்கைத்தலையில் முடியை வளர உதவும் வலிப்பு நோயைக் குணப்படுத்தும் வெறிநாய்க்கடிக்கு சிறந்த நிவாரணி ஜலதோஷத்தைக் குணப்படுத்தவும் மூட்டுவலி உயர் இரத்த அழுத்தம் போன்ற உடல் உபாதைகளைக் குறைக்கவும். இரத்த ஓட்டத்தைச் சீராக்கவும், கொலஸ்டராலைக் குறைக்கவும் அஜீரணத்தைப் போக்கவும், வெங்காயம் பெரிதும் உதவுகிறது. ஆயுர்வேத மருத்துவத்தில் இது சர்வரோக சஞ்சீவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

வெங்காயத்தில் கால்ஷியம். இரும்புச்சத்து, புரோட்டீன் மற்றும் வைட்டமின் சத்துக்களும் நிரம்ப இருக்கின்றன,

பண்டைய எகிப்தியர்கள் வெங்காயத்தின் மகாத்மியத்தை வெகுவாக அறிந்திருந்தார்கள், எகிப்திய பிரமிட்டுகளை எழுப்பிய அடிமைகளுக்குச் சக்தியூட்ட வெங்காயத்தையே முழு உணவாக அளித்தார்கள் வெங்காயம் மிகப்பழமையான சாகுபடித் தாவரம் என்பது 3200 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்திய கல்வெட்டுக்குறிப் ஒன்றிலிருந்து தெரியவருகிறது அக்கால எகிப்தியர்கள் வெங்காயத்தைப் புனிதப் பொருளாகவும் கருதினார்கள்.

கீழை நாட்டினர் மட்டுமன்றி மேலை நாட்டினரும் வெங்காயத்தின் மகத்துவத்தை அறிந்து அதைப் பெருமைப்படுத்தினர் ரோமில் நீரோ மன்னன் தான் இனிய குரலைப் பெற்றதற்கு வெங்காயமே பெருங்காரணம் எனப் புகழ் பாடினார். மத்திய கால ஐரோப்பியர்கள் வீட்டு வாடகை தரவும் திருமணப் பரிசளிக்கவும் வெங்காயத்தையே பயன்படுத்தினர்.

தொகுப்பு - க. ஜெகராசா
ச. நீ.

ஆதாரம் - கல்கண்டு

## அதிசய திருமணம்

தமிழ்நாட்டில் இதுவரை நடக்காத அதிசயத் திருமணம் கடந்தமாதம் சேலம் மாவட்டத்தில் ஆத்தூரில் நடைபெற்றது. இதன் விசேடம் என்னவென்றால் மூக்கில் விரலைவைப்பீர்கள்.

* பீடைமாதமென கூறும் ஆடிமாதம் இக்கல்யாணம்!
* படுமோசமான வேளை என்று அழைக்கப்படும் ராகுகாலம் எமகண்ட யோகம், மரணயோகத்தில் தாலிகட்டப்பட்டது!
* "எமதிசை" யெனச் சொல்லப்படும் வடதிசையில் மணமக்கள் அமர்ந்தனர்!
* கெட்ட எண் என வர்ணிக்கும் எட்டிப்பவுணில் மங்கல நாண்!
* விதவைகள் துர்சகுனம் என்று கூறும் உலகில் விதவைகள் ஆராத்தி!
* அன்றைய கல்யாணச் சாப்பாட்டுக்கு 51 ஆட்டுக்கடாக்கள் வெட்டி புரியாணி!

இவர்கள் கல்விச்செல்வி வாழ்வு எப்படியோ.

— சக்தி

# நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்—14

## சுந்தரர் கண்டுபிடித்த ஓநாய்!

**1954-ஆம்** ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோக ரீதியில் வருகை தந்திருந்த அன்றைய பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலை யாழ்ப்பாணத்தில் அவருக்களிக்கப்பட்ட வரவேற்பு உபசாரங்களில் மெய்மறந்து சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதியளித்தார்.

கொழும்பு திரும்பியதும் இந்த வாக்குறுதி தமது பதவிக்கே ஆபத்தைக் கொண்டு வரவிருப்பதைத் தெரிந்து கொண்டார். எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'சிங்களம் மட்டும்' என்று தீர்மானித்துப் பிரசாரத்திலீடுபட்டது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் 'சிங்களம் மட்டுமே' என்ற குமுறல் வெடித்துக் கொண்டிருந்தது. பாவம் சேர் ஜோண், சம அந்தஸ்து வாக்குறுதியை மறந்தார்.

சுதந்திரக் கட்சியையும் தாண்டி அடுத்த தேர்தலில் வெற்றிபெறவேண்டுமென்றுல் 'சிங்களம் மட்டுமே' சட்டம் வருமுன் நடவடிக்கையில் ஏதாவது செய்யவேண்டுமேயென்று சேர். ஜோண் சிந்தித்தார், இதற்கான சிலநடவடிக்கைகளை நிர்வாக ரீதியாக மேற்கொண்டார்.

இது போன்ற விஷயங்களை மோப்பம் பிடித்து முன் கூட்டியே கண்டறிந்து கொள்வதில் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்துக்கு நிகர் எவருமிலர்.

1955 ஆம் ஆண்டில் கொத்தலாவலை அரசு மறைமுகமாக நிர்வாக ரீதியில் சிங்களத்தை உத்தியோக மொழியாக்க முயற்சி செய்த பொழுது பாராளுமன்றக் கூட்டத்திற்குப் பிரதமர் சேர் ஜோண் ஒரு நாள் வந்ததும்; வவனியா சுந்தரர் அவரைப் பார்த்து "ஓநாய், ஓநாய்" என்று குரல் கொடுத்தார். இதைத் தொடர்ந்து சேர். ஜோணுக்கும் சுந்தரருக்குமிடையில் சர்ச்சை ஏற்பட்டது. அப்பொழுது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த எஸ்.டபிள்யு ஆர் டி.பண்டாரநாயகா இதை ரசித்தார்.

### முதலாவது பிரிவினைக் கோரிக்கை

கொத்தலாவலை அரசின் இந்த மறைமுக நடவடிக்கையைக் கண்ட பின்னர் தான் 1955 ஆம் ஆண்டு வவனியா சுந்தரர் முதல் தடவையாகப் பாராளுமன்றத்தில் 'தமிழ் இலங்கை' கோரும் பிரேரணையொன்றைக் கொண்டு வந்தார். இது தான் இலங்கையைப் பிரிக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட முதல் பிரேரணை! இதை அனுமதிப்பதற்கு எவரும் முன்வரவில்லை!

இதன் பின்னர் திரு சுந்தரலிங்கம் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துவிட்டுத் தமிழ மக்களுக்கெதிராகக் கொத்தலாவலை அமைச்சு எடுத்த பாரபட்சமான செயல்களை விளக்கி ஒரு அறிக்கை விடுத்தார் இந்த அறிக்கைக்குத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலமும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர். திரு. கு வன்னியசிங்கமும் ஒப்புதலளித்திருந்தனர்.

### சுந்தரருக்குச் சிங்கள வாக்குக்கள்

சுந்தரரின் பகிஷ்கரிப்பினால் காலியான வவனியாத் தொகுதிக்குப் புதிய எம். பி. யைத் தெரிந்தெடுப்பதற்கு நடந்த உப-தேர்தலில் சுந்தரர் மீண்டும் போட்டியிட்டார். அவருடன் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோக ரீதியில் ஒரு வேட்பாளரை நியமிக்காவிடினும் சேர் ஜோண் ஒரு வேட்பாளரை அனுப்பியிருந்தார் சுந்தரரே மீண்டும் அமோக வெற்றியீட்டினுர். வவனியாத் தொகுதியிலுள்ள சிங்கள வாக்குகளும் சுந்தரருக்கே கிடைத்தன.

### எஸ். எம். ஜி.

ஆனுலும் அவர் பாராளுமன்றம் செல்வதற்குமுன் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது!

இந்த விபரத்தைப் பின்னர் 1956 ஆம் ஆண்டில் பாராளுமன்ற விவாதத்தில் பேசுகையில் சுந்தரரே தெரிவித்தார்.

### "பிரதமர் எங்கே; அனுப்புங்கள் ஆளை!"

1956-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ம் தேதி பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதா சமர்ப்பிக்கப்பட்டது. இதை எதிர்த்து அன்று காலை இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினர். இவர்களைக் குண்டர்கள் கடுமையாகத் தாக்கினர். நண்பகலுடன் சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது. ஆனுல் கொழும்பில் தமிழர்கள் பல இடங்களிலும் தாக்கப்பட்டனர். தமிழரின் கடைகளும் சில இடங்களில் கொள்ளையடிக்கப்பட்டன. இங்கினியாகலை-அம்பாறைப் பகுதியில் கலகம் வெடித்துப் பெரும் வகுப்புக் கலகமாகப் பரவிக் கொண்டிருந்தது. பாராளுமன்றத்தில் இக்கலகச் சம்பவங்கள் பற்றி லங்கா சமசமாஜக் கட்சி. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசுக் கட்சித் தலைவர்களும், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம், வவனியா எம், பி, திரு. செ. சுந்தரலிங்கம் தினமும் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இவற்றுக்குப் பிரதமர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயகா பதிலளிக்கையில் தாம் இச்சம்பவங்கள் பற்றித் தெரிந்து கொண்டிருப்பதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பதாகவும் உறுதியளித்து வந்தார்.

ஜூன் மாதம் 13-ம் தேதி மாலை திரு கு. வன்னியசிங்கம் சிங்களம்மட்டும் மசோதா மீதான தமது பேச்சை முடித்ததும் சபாநாயகர் கவர்னர் ஜெனரலிடமிருந்து (சேர் ஒலிவர் குணதிலகா) தமக்கு வந்த செய்தியைச் சபைக்கு வாசித்தார். இராணுவத் தொண்டர் படையைத் தீவிர சேவைக்கு அழைக்கும் தமது ஆணையைக் கவர்னர் ஜெனரல் பாராளுமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

சபாநாயகர் இதை வாசித்து முடித்ததும் வவனியா சுந்தரலிங்கம் எழுந்தார்.

"சபாநாயகர் அவர்களே! நீங்கள் இப்பொழுது வாசித்த அறிவிப்பைத் தொடர்ந்து சமஷ்டிக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக் கிளையிலிருந்து இச்சபை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட தந்தியை நான் சற்று நேரத்துக்குமுன் பெற்றுக்கொண்டேன்" என்று கூறிய சுந்தரர் அதை வாசிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டே வாசித்தார்.

"சிங்களசகோதரர்களின் செயல்கள் தாங்கமுடியாமலுள்ளன. எமது சகோதரிகள் பலரைக் காணவில்லை. அகிம்சை வழி எதிர்ப்பு சாத்தியமில்லை. நிர்வாகம் பாராமுகமாயிருக்கிறது. நேரில் இங்கு வரவும் உடனடி விசாரணை கோரவும்"

இத் தந்திச் செய்தியைப் படித்து முடித்த சுந்தரர்-

"சபாநாயகர் அவர்களே நீங்கள் பிரதமருக்கு உடனேயே தகவல் அனுப்ப வேண்டுமென விரும்புகிறேன். இந்த நிலைமையைப் பிரதமர் எப்படிக் கையாளுகின்றுரென்பதைச் சபை தெரிந்துகொள்ள வேண்டுமென்பதால் நான் சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கும்படி கோருவதற்கு உத்தேசித்திருக்கிறேன்" என்று ஆத்திரத்துடன் கூறினுர். பின்னர் ஆவேசமடைந்தவராகக் காணப்பட்ட சுந்தரர் உரத்த குரலில், "இச்சபைக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையிலேயே வாக்குறுதிகள் அளித்தபோதிலும் இந்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தகுதியில்லாதிருக்கும் பிரதமரின் செயலைப் பரிசீலனைசெய்யவேண்டுமென்று விரும்புகிறேன்" என்று கூறிவிட்டு "பெண்கள் கற்பழிக்கப்படுகிறுர்கள். வீடுகள் தீ வைக்கப்படுகின்றன. மட்டக்களப்பு முழுவதுமே சுவாலை விடுகிறது. ஆனுல் அவர் இங்கே வந்து எங்களுக்கு உறுதியளிக்கிறுர்" என்று கர்ஜித்தார். தொடர்ந்து "பிரதமர் எங்கே? அனுப்புங்கள் ஆளை அவருக்கு" என்று ஆணை இடுவது போல் முழங்கினுர்.

இதன் பின் மட்டக்களப்பு நிலைமை பற்றி திரு. பீட்டர் கெனமன், டாக்டர் என். எம். பெரேரா திரு.எஸ் ஜே வி.செல்வநாயகம் ஆகியோர் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதைத் தொடர்ந்து பிரதமர் சபைக்கு வந்து அறிக்கை விடுவாரென்று சபை முதல்வர் சி பி டி. சில்வா தெரிவித்ததைத்தொடர்ந்து உத்தியோக மொழி மசோதா மீதான விவாதம் தொடர்ந்தது. (ஆதாரம் ஹன்சார்ட் 1956 ஜூன் 13)

### சுந்தரரின் ஆளுமை!

ஆஜானுபாகுவான தோற்றமும் எவருக்கும் அஞ்சாத குணமும் நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நடையும் சுந்தரர் எதை எடுத்துச் சொல்லும் போதும் மற்றவர்கள் உடன் வாய்திறந்து பதில் சொல்ல முடியாததன்மையை ஏற்படுத்திவிடும். சுந்தரரின் ஆளுமை அது!

1956-ஆம் ஆண்டு ஜூன் 15-ஆந் தேதி அதிகாலை சிங்களம் மட்டும் மசோதா சகல நிலையிலும் நிறைவேற்றப்படும் கடைசிக்கட்டத்தில் பாராளுமன்றத்தில் "போர்ப் பிரகடனம்" செய்த சுந்தரர் சிங்களம் மட்டும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறிய பின்னரும் பாராளுமன்றக் கூட்டங்களுக்குச் செல்லாமல் பகிஷ்கரிப்புச் செய்தார்.

ஒவ்வொரு மூன்று மாதம் முடியுமுன்னர் சபைக்கூட்டத்துக்கு ஒரு வாசலால வந்து சபாநாயகருக்கு மரியாதை செலுத்தி விட்டு மறுவாசலால் சென்றுவிடுவார்!

1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை யு என். பி. கடுமையாக எதிர்த்தது. வடக்கு, கிழக்கில் தமிழ்க்காங்கிரசும் திரு. சுந்தரலிங்கமும் எதிர்த்தனர்.

சுந்தரர் மட்டும் இந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகப் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தார்,

(மிகுதி அடுத்த வாரம்)

## ● சைவம் கமழும் காரைநகர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரைநகர் மிகப் பழைய காலந் தொட்டுச் சைவம் பரப்பிய பிரதேசம்: விறைத்த பற்றில் விரதங்கள், அநுட்டானங்களைக் கைவிடாது விடாக்கண்டர்களாகிய சைவத் திருவாளர்களுக்கு அங்கே வழிகாட்டிய குருக்கள்மாரின் ஞான பரம்பரை இன்றும் உண்டு. இன்றைய ஈழத்துச் சிதம்பரம் என்னும் காரைநகர் சிவன்கோவிலையும், அதனை மையமாகக் கொண்டியங்கும் சிவனடியார்களின் சேவையையும் சேக்கிழார் சொல்லியுள வேண்டுமேயல்லாமல் நம்மனோரால் சொல்ல முடியாது. சிவபெருமானின் திரு முகங்களை முன்னிட்டு ஆசாரியாபிஷேகத் திருநாமம் புனையும் வழக்கம் இன்றும் காரைநகரிலே பாரம்பரியமாக நிலவிவருகின்றது. அந்தப் பாரம்பரியத்தில்வந்த சிவத்திரு கா. கி. ஈஸ்வரக்குருக்கள் அவர்கள் தற்புருஷ சிவாசாரியார் என்னும் திருநாமம் பெற்றுள்ளார். இவர் செய்யப்போகும் சைவப் பணியினை இருந்து பார்ப்போம். வாழ்க இவர். வளர்க இவர் சைவப்பணி. சைவம் வெல்க. தமிழ் தழைக்க சேரவாரும் செகத்தீரே.

'மில்க்வைற் செய்தி'

## ருஷ்யப் புரட்சி பற்றிய பாரதி பார்வை

### விமர்சனத்திற்கு ஒரு விமர்சனம்

★ ந. இரவீந்திரன்

**14-**7 85 — 21-7-85 ஆகிய இரு 'ஈழநாடு' வாரமலர்களில் வெளிவந்த 'பாரதியின் பன்முகப்பார்வையும் பாரதி பற்றிய பன்முகப் பார்வையும்' என்ற மயிலங்கூடலூார் பி. நடராசன் அவர்களால் எழுதப்பட்ட 'பாரதி பன்முகப் பார்வை' மீதான விமரிசனக் கட்டுரை நடுநிலை நின்று திறனாய்வு செய்தலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கியது இது. பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் மறைவுக்குப் பின். அவர் பேசன்றே நடுநிலை நின்று ஆய்வுசெய்யும் திறனாய்வாளர் சிலர் பலதரப்பட்ட காரணங்களினுல் வெளிநாடுகள் சென்ற நிலையில், இன்னும் சிலர் இங்கிருந்து ஒருபக்கஞ்சார்ந்து நின்று எழுதும் காழ்ப்புணர்ச்சிகளோ புகழ்ச்சி வார்த்தைகளோ தான் விமரிசனம் என்ற நிலையைத் தகர்த்து நேர்மையான விமரிசனத்தை முன்வைப்போர் இன்னும் உண்டு எனக்காட்டும் நல்ல சகுனம்.

அத்தகைய நடுநிலையுணர்வோடு அவர் 'அரசியல் இலக்கியமும் பாரதியும்' என்ற ந இரவீந்திரனின் கட்டுரை மீது வெளியிட்ட மாற்றுக் கருத்தொன்றின் மீது அக்கட்டுரை ஆசிரியன் என்ற முறையில் எனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர் 'புதிய ருஷ்யா' என்ற பாரதியின் கவிதை ருஷ்யாவில் நிகழ்ந்த பெப்ரவரிப் புரட்சியின் பின்பா அல்லது அக்டோபர் புரட்சியின் பின்பா பாடப்பட்டது என்ற சர்ச்சையைக் கிளப்பியுள்ளார். அவர் இப்பிரச்சனையை எழுப்பியதன் 'உள்நோக்கம்' பற்றி எனக்குத் தெரியாது. ஆயினும் பெரும்பாலானவர்கள் பாரதி பெப்ரவரிப் புரட்சியையே 'புதிய ருஷ்யா'வில் பாடினுர் என்கிறபோது, பாரதி முதலாளித்துவப் புரட்சியில் ஆதரவாளரேயன்றி சோஷலிஸ - அக்டோபர் புரட்சியின் ஆதரவாளர் அல்ல என்று காட்டும் உள்நோக்கம் உடையவர்களாக இருப்பதையேகண்டிருக்கிறேன். இவர்கள் கூறுவதுபோல் 'புதிய ருஷ்யா' பெப்ரவரிப் புரட்சியுடன் பாடப்பட்டிருந்தாலும்கூட பாரதி சோஷலிஸப் புரட்சியின் ஆதரவாளர் என்பதை எந்தவொரு பலமான ஆதாரம் கொண்டும் மறுத்துரைக்க முடியாது அதனுலேயே அவர்கள் அக்டோபர் புரட்சியை பாரதி பாடவில்லை என்று சொல்லும் வீண் முயற்சியில் இறங்கவேண்டியுள்ளது.

பாரதி 'புதிய ருஷ்யா'வை அக்டோபர் புரட்சிக்குப் பின்பே பாடினு? என்பதற்குப் பலநூறு ஆதாரங்கள் உண்டு. மாருக, பெப்ரவரிப் புரட்சியுடன் பாடப்பட்டுவிட்டது என்பதற்கான ஆதாரங்களோ மிகப் பலவீனமானவையாயுள்ளன.

இங்கேயும், மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள் பெப்ரவரிப் புரட்சி வெளிக்கொணர்ந்த கருத்துக்கள் பாரதியின் புதிய ருஷ்யா வில் காணப்படுவதாகக் கூறுகிறுர். பெப்ரவரிப் புரட்சி ஜாரை வீழ்த்திய அளவில் முற்போக்கானது; ஆதலால் பாரதியால் வரவேற்கப்பட்டிருக்கும். இருப்பினும் 'புதிய ருஷ்யா' வெளியிடும் அளவிறந்த ஆர்வம் பெப்ரவரிப் புரட்சியுடன் பாரதிக்கு ஏற்பட்டிருக்க நியாயமில்லை. அதற்கு எனது கட்டுரையில் மேற்கோள் காட்டிய "ருஷ்யாவில் ஜார் சக்கரவர்த்தியின் ஆட்சி பெரும்பாலும் ஸமத்துவ கக்ஷியார் அதாவது போல்ஷ்விஸ்ட் கட்சியாரின் பலத்தாலேயே அழிக்கப்பட்டது எனினும் ஜார் வீழ்ச்சியடைந்த மாத்திரத்திலே அதிகாரம் போல்ஷிவிஸ்ட்களின் கைக்கு வந்துவிடவில்லை. அப்பால் சிறிதுகாலம், முதலாளிக் கூட்டத்தார் கெரென்ஸ்கி என்பவரைத் தலைவராக நிறுத்தி. ஒருவிதமான குடியரசு நடத்தத் தொடங்கினுர்கள்." (பக் 92; 'நவீன ருஷ்யாவில் விவாகவிதிகள்.") என்ற பாரதியின் கண்ணோட்டமே போதுமான சான்றுகும். அத்துடன் பெப்ரவரிப் புரட்சியைப் பொறுத்தவரை பாரதி, 28-03-1917 இல் எழுதியது போல் 'பூமியில் நல்லயுகம் தோன்றப்போகிறது.....ருஷ்யராஜ்யப் புரட்சியானது இனி வரபபோகின்ற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று" என்றே கருதினுர். இதற்கு மாருக 'புதிய ருஷ்யா" என்ற பாடலை 'கிருதயுகம் எழுக மாதோ' என்று 'இனி வரப்போகின்ற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்ருக' அல்ல, வந்துவிட்ட நற்காலத்தின் தொடக்கமாக முடிக்கிறுர் இத்தகைய ஒரு முத்தாய்பபை. 1905 ஆம் ஆண்டின் ருஷ்யப் புரட்சியிலிருந்தே ருஷ்ய மக்களின் எழுச்சிப்போக்கைக் கூர்மதி

(8-ம் பக்கம் பார்க்க)

# எமது சிறுகதை

## நான் வரமாட்டன்

★ வளவை வளவன்

"தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தை திருஞானசம்பந்தர் மூன்று வயதில் தான்பாடினார். இப்படி அன்று ஆசிரியர் படிப்பித்தபோது சுத்தப்பொய் என்று தர்க்கித்து அடிவாங்கிய நாட்களை இன்றும் நினைத்துப் பார்ப்பதுண்டு நான் மட்டுமா நம்பிக்கையீனப்பட்டேன். என்னைவிட இன்னும் எத்தனையோ மாணவர்கள் நம்பவில்லைத்தான். ஆனாலும் அவர்கள் ஆசிரியர் சொல்வதை அப்படியே சிரணித்துக் கொள்வதால் என்னைப்போல அபிப்பிராயங்களை வெளிக்காட்டிக்கொள்வதில்லை. இந்தத்தேவாரச்சங்கதியை இன்றும் கடப்பலர் இன்னமும் நம்பமறுக்கின்றனர் என்பது பலருக்கும் தெரிந்த ஒன்று

ஆனால் எனக்கு..? ஒருவேளை திருஞானசம்பந்தர் அந்த வயதில் பாடி இருக்கலாம் என்ற எண்ணங்களை இப்போது வலுப்படுத்திக் கொண்டிருந்தான் என்மகன் நீதி. நீதிக்கும் வயது மூன்று தான் ஆகிறது. கொட்டும்மலை அருவிபோல அவன்வார்த்தைச் சிதறல்கள் தான் எத்தனை அற்புதமானவை. இயற்கையின் சீதனமா... அல்லது... திறமையின் வெளிப்பாடா.

இனங்காணமுடியாத பூரிப்பு என்னுள்ளத்தை எங்கெல்லாமோ இழுத்துச்செல்லும். அந்த இழுவை விசையில் நான் ஊஞ்சலில் மிதந்து தென்றலில் ஆடுவேன். அந்த ஆட்டத்தின் மயக்கத்தில் நான் என்னையே மறந்து விடுவேன்.

நீதிசாப்பிட்டாச்சா.........? படிக்கவெல்லோ வேணும். இப்படித்தான் ஒவ்வொரு மாலைப்பொழுதும் நான் கேட்பது வழக்கம் சாப்பிட்டாச்சு... இனிப்படிப்பம். இப்படித்தான் அவனும் சொல்வான். ஆனால் இதுவரை படித்துவந்த 'தமிழ் ஒன்று' என்ற அந்தப் புத்தகம் இப்போது அவனுக்குப்பிடிக்க வில்லைப்போலும்.

''அப்பா எனக்கு வேறை புத்தகம் வாங்கித்தாங்கோ பழம்புத்தகம் வேண்டாம்'' என்று பட்டென்று பதிலளித்தான்

ஏன் உங்கடை புத்தகம் தாம் அச்சாப்புத்தகம் என்று நான் சொல்லிமுடிப்பதற்குள், ''அச்சாப்புத்தகம் எல்லாம் தெரியும். அது இனிவேணும் இனிப்புதிசு வேணும்'' என்று நிச்சய சுருதியோடு சொல்லிவிட்டு, நாளைக்குப்புதுப்புத்தகம் வாங்கித்தாங்கப்பா என்று என் நாடியைத்தடவினான் நீதி. பிஞ்சு விரல்களின் வருடல் என்னைஎங்கோ இழுத்துச்செல்ல அவன் நினைவைத் திசைமாற்ற எண்ணி வானத்து நிலவைக்காட்டிச்'' சொக்கன் வந்து படிக்கப் புத்தகம் கேட்கிறான்'' என்றேன்.

''அப்பா... அப்பா.. உந்தச் சொக்கன் படிக்கமாட்டான்... பாதிச்சொக்கன் பாவம் என்னப்பா'' என்று விட்டுபெரிய சொக்கன் எங்கப்பா என்று வேறு கேள்வியைப் போட்டுத் துளைத்தான். பதிலுக்கு.

''அவன் ஒழிச்சுநிக்கிறான் நாளைக்கு வருவான்''

''நாங்கள் போய்ப்பாப்பமே சங்கிலிமச்சான் சகிந்தாக்கா ஒழிச்சு விளையாடுற மாதிரித்தான் சொக்கனும் ஒழிச்சிருக்கிறானப்பா. வாங்கப்பா நாங்கள் போய்ப் பாப்பம்'' என்று தன் ஒழிச்சு விளையாடும் படலத்தை நினைவுகூர்ந்து கொண்டே அடம்பிடித்தான்.

நிலவில் மனிதர்கள் உலாவி வருகின்ற காலம் தான் ஆனாலும்அவனுக்கு என்ன சொல்லி நான் தவறிக்கொள்ள என்று ஏங்கினேன். அயோத்திராமன் நிலவைப்பிடித்துத் தரும்படி அடம்பிடித்தபோது கண்ணாடியில் நிலவைக்காட்டியகைகேயியின் நினைவுகள் என்மனத்திலும் ஓடி நிலைத்தது கண்ணாடியை எடுத்துக்காட்டினேன், எப்படியாவதுஏமாற்றிவிடலாமென்று இது கண்ணாடி இது கண்ணாடி என்று கூறிக் கண்ணாடியைத்தட்டி விட்டான். கண்ணாடிதரையில் வீழ்ந்து சிதறியதுதான் மிச்சம்.

மனிதமனம் பலவீனமானதுதானா? என்மனத்தில் சினத்தின் படைவெடுப்பு ஒரேயொரு கணம்தான்; என் சினத்தை நான் அவன் மீது திணிக்கமுனைந்தபோது... தன் குவளைவிழிகளால் ஒருதாக்கு... அந்தவிழிகளின் வீச்சு என்ன வானத்து மின்னலா? நான் என்னைமறந்து சிரிக்கிறேன். ''அப்பாச்சிரிப்பு... நாய்ச் சிரிப்பு... கூ.... கூ....'' என்று கைகளைக்கொட்டி அவன் சிரிக்கும்போது என்னால்சிரிக்காமல் இருக்கமுடியுமா? மீண்டும் மீண்டும் சிரிக்கிறேன். நாயின் இரைப்பை எனது சிரிப்பிற்கு ஒப்பிட்டுக் கொண்டானே என்ற வியப்பு என்னைக்குடைகிறது. இந்த மழலைச்சிந்தனைகளெல்லாம் இப்படிவளர்ச்சியடையும் உலகில்தானே மனிதன் தனது அறிவியல் வளர்ச்சியென்றெண்ணிய அறிவியற் குழந்தைப்பருவத்தின் சிருஷ்டிகளான கொலைக்கருவிகள், குண்டுகள், கொடிய ஏவுகணைகளையும் பாவிக்கத் தருணம் பார்க்கின்றான். சே! என்னே பேதைமை நிறைந்த மனித வாழ்வு. மனத்திற்குள் விரக்தி நிறைந்து வழிகிறது.

நான் நீதியை எண்ணிப் பார்க்கின்றேன். ஐந்து வயதிற்குரிய பாடப் புத்தகத்தினை அப்படியே முற்றாக மனனஞ் செய்துவிட்டானே இந்த மூன்று வயதில் இப்படியொரு ஞாபக சக்தியா? கல்வி வளர்ச்சியின் காலவேகமா? அல்லது உளவளர்ச்சியின் ஞாபக விரிப்பா? என்றால் எதையுமே அநுமானிக்க முடியவில்லை.

என் மனைவி தங்கத்தோடு நீதியின் திறமைபற்றியும் சமகாலநிகழ்வுகள் பற்றியவானொலிச் செய்திகளைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்தேன். வானொலிச் செய்தி தந்த கொதிப்பு மனதில். வாயிலே சுருட்டு. இப்படித்தான் நான் இருந்தேன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த நீதி எதையோ தீர்மானித்தவனாக வந்து என் மடி மீது வீழ்ந்து கொண்டான் தாயின் முகத்தில் நீதியின்விழிகள் எதையோ தேடுகின்றன. தாய் தங்கமோ பக்கத்து வீட்டு மதன் தனையில் பலமான காயத்தோடு மனைவியைப் படுகொலைக்குப் பலிகொடுத்து விட்டு சோகச் செய்தியைப் பற்றிச் சொல்லிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

''மதன் காரியாலயத்திலிருந்தே காயத்தோடு தப்பி ஓடி எங்கோ ஒரு முஸ்லீம் வீட்டில் தங்கி இருந்தவனும். அங்கிருந்துதானும் அகதி முகாமுக்கு வந்து சேர்ந்து இஞ்சை வந்திருக்கிறான். மாலா பாவம் எந்த நிலையில் எப்படிக் கொலைசெய்யப்பட்டாளோ யாருக்குத் தெரியும்... மதன் சொல்லி அழுகிறான்''

பரிதாபத்திற்குரிய மதனின் கதையைச் சொல்லும் போது தங்கத்தின் விழிகள் கலங்கிப் போயின. அந்தக் கோரக் காட்சிகளை இவன் பார்த்திருக்க முடிந்திருந்தால்... ஒரு வேளை இதயம் வெடித்துச் செத்திருப்பானோ?

ஹும்... என்ன செய்வது, இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கிட்டாமலா போகும். ஆண்டுக்காண்டு இப்படி நடக்குது!

(8-ம் பக்கம் பார்க்க)



சாள்ஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் ருவிஸ்ற்

தமிழில்: 'பேனு'

## பேஜின்-யூதக் கிழவனுக்கு தூக்குத்தண்டனை

நீதிமன்றம் நிறைந்த வழிந்தது எல்லாரும் குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்த ஒருவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் யாருமில்லை. யூதக்கிழவன் பேஜின் தான். நீதவான் ஜுரிமாரிடம் பேஜின் மீதானக் குற்றச்சாட்டுகளை விளக்கிக்கொண்டிருந்தார். பேஜின் தன் கழுத்தை வளைத்து தலையை நீட்டி அவைகளை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அந்தக் கடைசி நேரத்திலாகுதல் தனது வழக்கறிஞர் தன்னைக் காப்பாற்றும் வகையில் ஏதும் சொல்லமாட்டாராவென வழக்கறிஞர் பக்கமும் அடிக்கடி திரும்பிப்பார்த்தான்.

திடீரென நீதிமன்றத்தில் சிறிது சத்தம் ஏற்பட்டது. சனங்கள் கலகலப்பாகப் பேசிக்கொண்டும் எழுந்து எழுந்து தன்னைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். ஜுரி சபையினர் தீர்ப்பைப்பற்றி ஆலோசிப்பதற்காக தமது அறைக்குச் சென்றார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் நீதிமன்றில் அமைதி ஏற்பட்டது. ஜுரிமார் திரும்பினர் தீர்ப்பு 'குற்றவாளி' என அறிவிக்கப்பட்டது. வெளியில் நின்ற சனங்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் புரிந்தனர். மீண்டும் அமைதி ஏற்பட்டதும் அவன் மீது மரணதண்டனை விதிக்கப்படக்கூடாதென்பதற்கு ஏதும் காரணம் காட்ட முடியுமா என்று பேஜின் கேட்கப்பட்டான். இரு தடவைகள் அக்கேள்விகள் கேட்கப்பட்டும் கூட ''நான் கிழவன், நான் கிழவன்'' என்று மட்டுமே அவன் கூறிக்கொண்டிருந்தான். நீதவான் மரணதண்டனையை பிரகடனப்படுத்தினார். பேஜின் அவனது அறைக்கு அழைத்துச்செல்லப்பட்டான். அந்த அறையில் கல்லால் ஆன ஒரு ஆசனம் கிடந்தது. படுக்கையாகவும் அது பயன்பட்டது. அதன் மீது அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்த பேஜின் நினைவில் நீதவான் கடைசியாகக் கூறியவார்த்தைகள் ஒலித்தன. ''கழுத்தில் சுருக்கிட்டு சாகும்வரை தூக்கிடவேண்டும் சாகும்வரை தூக்கிடவேண்டும்''

நேரமாக ஆக இருட்டிக் கொண்டுவந்தது, தன்னோடு பழகியவர்கள் தன்னால் ஜெயிலுக்குப் போனவர்கள் தன்னால் மரணத்துக்குள்ளானவர்கள் எல்லாரையும் பற்றி நினைத்துக்கொண்டான். சிலர் சாகும்போது பிரார்த்தனை செய்வதைக்கண்டு கிண்டல் பண்ணியும் இருக்கிறான் சிலர்இதே அறையில் இதே ஆசனத்தில் அமர்ந்திருக்கவும் கூடும்.

சனிக்கிழமைஇரவு இன்னும் ஒருநாள் தான் வாழப்போகிறான். அடுத்த நாள் ஞாயிறு விடிந்தது.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பேஜின் தன் அறையில் பொறியில் மாட்டப்பட்ட ஒரு மிருகம்போல் காட்சியளித்தான். தன் பழைய வாழ்வை நினைத்து நினைத்து முனகிக் கொண்டிருந்தான்.

''சரி, சரி சாள்லி நல்ல காரியம் செய்தாய் ஏன் ஒலிவரும் தான். ஹ ஹ ஹ ஹ''

சிறைக்காவலாளி வந்து அவனை அழைத்தான். ''பேஜின் இதோ யாரோ வந்திருக்கிறார்கள் உன்னோடு பேசுவதற்கு'' காவலாளியிதைக் கூறும்போதேமுதியவனான பிரவின்லோ உள்ளே வந்தார். அவர் பின்னால் ஒலிவர் நின்றான்,

''நீங்கள் சொல்வதை விரைவாகச் சொல்லிவிடுங்கள். ஐயா நேரம் செல்லச் செல்ல இவன் நிலைமை மோசமாகிக் கொண்டு வருகின்றது'' என்றான் காவலன்.

''பேஜின் உன்னிடம் சில முக்கியமான பத்திரங்களை மங்க்ஸ் என்பவன் பத்திரமாக வைத்திருப்பதற்காக கொடுத்துள்ளான். அவைகளை எங்கே வைத்திருக்கிறாய்'' என்று கேட்டார் பிரவுன்லோ,

''அதெல்லாம் பொய் என்னிடம் பத்திரம் ஏதுமில்லை'' என்று மறுத்தான் பேஜின்.


''இன்னமும் அப்படியே சொல்லிக்கொண்டிருக்காதே பில்சைக்ஸ் செத்துப்போனான். மங்க்ஸ் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டான். இனியும் உனக்கு அதனால் பிரயோசனமில்லை. அவைகளை எங்கே வைத்திருக்கிறாய்'' என்றார் பிரவுன்லோ.

ஒலிவர் ருவிஸ்றை அருகில் அழைத்து அந்தப்பத்திரங்கள் இருக்கும் இடத்தைக் கூறினான் பேஜின்.

''ஒரு கன்வஸ் பையில் போட்டு என் வீட்டின் முதல் அறையின் புகை போக்கியின் உள்ளே கொஞ்சம் உயரத்தில் ஒரு துவாரத்துக்குள் வைத்திருக்கிறேன்'' என்று தெரிவித்தான் கிழவன்.

''வேறு ஏதும் கேள்விகள் கேட்கப்போகிறீர்களா ஐயா'' காவலன் கேட்டான்.

''இல்லை நன்றி'' என்றார் பிரவுன்லோ.



விசாரணைக் கூண்டில் யூதக் கிழவன் பேஜின்

### முடிவு

திருவாளர் பிரவுன்லோ ஒலிவர் ருவிஸ்றைதன் மகனாக தத்து எடுத்துக்கொண்டு அவனை நல்லபடியாக ஒரு மனிதனுக்கும் வகையில் வளர்த்து வரலானார்.

மங்க்ஸ் தனது பங்குசொத்தைப் பெற்றுக்கொண்டு வேறு இடத்துக்குச் சென்றுவிட்டான். அங்கே மிகவிரைவிலே கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து அந்தச் சொத்தையெல்லாம் அழித்துவிட்டு குற்றச்செயல்களில் ஈடுபட்டு ஜெயிலுக்குச் சென்றான். அங்கேயே மரணமானான். இதே கதிதான் பேஜினின் ஏனைய நண்பர்களுக்கும் நேர்ந்தது. ஆனால் சார்லிபேட்ஸ் மாத்திரம் தன் வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொண்டு ஒரு விவசாயப்பண்ணையில் தொழிலாளியாகச்சேர்ந்து ஆனந்தமாக வாழ்ந்துவந்தான்.

(முற்றும்)

# ருஷ்யப் புரட்சி...

(6ம் பக்கத் தொடர்ச்சி]

யோடு ஆய்ந்து நோக்கிய பாரதியால், அவராலேயே முழுமையெனக் கருதப்படாத பெப்ரவரிப் புரட்சிக்குக் கொடுத்திருக்க முடியுமா? பாரதி எந்தவொரு விவகாரத்திலும் வெறும் வார்த்தை ஜாலங்களில் மயங்காது செயல் முறையை வைத்தே மதிப்பீடு செய்தவர். ஆதலால் "குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக் குடிமை நீதி" என்று 'புதிய ருஷ்யா'வில் பாடியபோது, மக்களின் விருப்புக்கு மாறாகத் தொடர்ந்தும் ஏகாதிபத்திய யுத்தத்தை நடத்திய, ஜாரிசத்துக்கு ஒப்பான கொள்கையுடைய (முற்றாக ஜாரிசத்தை அழித்தொழிக்காத) கெரன்ஸ்கி அரசைச் சொல்லியிருப்பாரா?

அந்தவகையிலே பாரதி, ஜார் வீழ்ந்து எட்டுமாதங்களின் பின் ஜாரிஸத்தின் வேரும் வேரடி மண்ணும் கெல்லியெறியப்பட்டதைப் பாட்டாய் வடித்திருக்கமுடியும். அது செத்த பாம்படிக்கும் வீரமாகாது. அதைவிடப் பிரதானமானது அவர் ஓர் அவசரக்குடுக்கையல்ல என்பதும் நிதானமாகவும் அறிவியல் பூர்வமாகவும் சிந்திப்பவர் என்பதுந்தான்.

இன்னொரு காரணத்தையும் மயிலங்கூடலூர் பி. நடராசன் முன்வைக்கிறார்; 'புதிய ருஷ்யாவில்' லெனினைக் குறிப்பிடாதது அக்டோபர் புரட்சியைப் பாடவில்லை என்பதற்கு ஓர் ஆதாரமாம். அவ்வாறயின் பெப்ரவரிப் புரட்சியுடன் அதிகாரத்துக்குவந்த கெரன்ஸ்கியை அப்பாட்டில் குறிப்பிடாததை என்னென்பது? தவிர அப்புரட்சிக்குத் தலைமை தாங்கிய தனிமனிதர்களையன்றி அந்த யுகப்புரட்சியின் சாராம்சத்தையே - யாரும் இனி அடிமையல்ல என்ற அப்புரட்சியின் வெளிப்பாட்டையே பெரிதும் கவனத்தில் கொண்டார் என்பதே முக்கியமானதாகும்.

இன்னும், மேலே நான் மேற்கோள் காட்டியிருந்த 'நவீன ருஷ்யாவின் விவாகவிதிகள்' என்ற பாரதியின் கட்டுரையுங்கூட பாரதி கண்ட நவீன ருஷ்யா அக்டோபர் புரட்சியின் விளைவான ருஷ்யாவே என்பதையே காட்டுகிறது. அத்துடன் அக்டோபர் புரட்சிக்குமுன் 'புதிய (நவீன) ருஷ்யா' என பாரதி அழைத்ததற்குச் சான்றேதும் என்னால் காணமுடியவில்லை.

இவையெல்லாம் உணர்த்தும் அர்த்தத்தில், இன்னும் தனியே ஆய்வுக்குட்படுத்த வேண்டிய பல சான்றுகளின் அடிப்படையில் இருந்தே, நான், பாரதி அக்டோபர் புரட்சியை 'புதிய ருஷ்யா' எனப்பாடினார் என்றேன். ஆதலால் இடறிவீழ்ந்தது நானல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரென நம்புகிறேன்.

ஒட்டுமொத்தமாகநோக்கும் போது அவரது நேர்மையான விமரிசனம் மதிக்கப்படவேண்டியது. அவர் சுட்டிக்காட்டிய இந்தப் பிரச்னை இன்னும் இது குறித்து ஆழமாக ஆய்வுசெய்தலுக்குத் தூண்டும் என்ற வகையிலும் அவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

# சிறுகதை

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

இருவருமே எங்களை மறந்த ஒரு சுய நினைவற்ற நிலையில் இருந்தோம்

அப்பா... சூட்டு... அச்சா அச்சா என்று என் கையில் இருந்த சுருட்டைப் பிடுங்கிக் கொண்டு, தம்பிக்கு தம்பிக்கு என்று நீதி சத்தமிட்ட போதுதான் நான் சுய உணர்வு பெற்றுச் சுருட்டைப் பறித்துக் கொண்டேன்.

கங்கா... கங்கா என்று சொல்லிச் சுருட்டைப் புடுங்கி வீசிவிட்டு என் தவறை நினைத்துக் கொண்டேன். இனிமேல் இவனுக்கு முன்னாலே ஒண்டுஞ் செய்யேலாதப்பா என்று நச்சரித்துக் கொண்டேன்

புகைத்தல் கூடாது என்று கறித்தங்கம் வேறு சிரித்துக் கொண்டாள் சுருட்டுக்கும் இனிச்சீட்டுக்கிழிக்க வேண்டியது தான் என்று மனத்திற்குள் முடிவு செய்து கொண்ட போது தான் மதன் எல்லாமிழந்த கம்பனின் இராவணனாக - வந்து கொண்டிருந்தான்.

நான் மதனைத் தேற்றினேன் அழுகின்ற பிள்ளைக்குத்தாலாட்டு, பசித்த வயிற்றுக்கு உணவு ஆனால் மதனுக்கும் மதனைப்போன்ற மற்ற வர்க்கும்...?

"அப்பா மாமாக்கு ஆர் அடிச்சது ஏன் தலையிலே அடிச்சவன்? மாமா அடிக்கேல்லையே? மாமா அடிக்கமாட்டுதே" - நீண்ட மௌனத்தைக் கலைத்துக் கேள்விமேல் கேள்வி போட்டாள் நீதி

பதில் சொன்னாலன்றி நீதி விடமாட்டாள். எப்படி என்னவென்று சொல்வது? எனக்குள் ஒரு தடுமாற்றம். இந்தப் பிஞ்சு மனதில் இவைகளைச் சொல்லி வடுக்களை ஏற்படுத்தக்கூடாது. உணர்ச்சிகளைக் கொட்டி வெறியூட்டுவதால் மட்டும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளவா முடிகிறது? நான் என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி விட்டு ஒருவாறு சொன்னேன். கொழும்பிலை ஆரோ கள்ளர் பனைவெடுக்கப் போய் மாமாவை அடிச்சுப் போட்டாங்களாம், அது தான் மாமா அடிக்காமல் தப்பி வந்திட்டுது"

"அப்ப கொழும்பிலை எல்லாரும் கள்ளரோ?"

"கள்ளரும் இருக்கிறாங்கள். நல்லவங்களும் இருக்கிறாங்கள்"

"அப்ப எனக்கும் அடிப்பங்களே அப்பா"

"ஒம்... அடிப்பங்கள் தானே..."

"இரத்தம் வருமே மாமாவுக்கும் இரத்தம் வந்ததே"

"மண்டை உடைஞ்சால் இரத்தம் வரும்."

"அப்ப நான் கொழும்புக்கு வரமாட்டன்"

ஏன் நீதி கொழும்புக்கு இது வரை எங்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மதன் தான் இப்படிக் கேட்டுக் கொண்டான்

றேடியோவிலை பாட. என்று சொல்லி விட்டுத் தங்கத்தின் பின்னே சென்று ஒளிந்து கொண்டாள் நீதி அவளத்தின் பாவனை எப்படி அவனை ஒழிக்க வைத்திருக்கவேண்டும்

மதன் சிரித்தான் கவலையை மறந்து...

'அது... றேடியோவிலே நடக்கும் சிறுவர் நிகழ்ச்சியை இவனுக்கு போட்டுக் காட்டுறனாங்கள் சும்மா நீதியைக் கொழும்புக்குக் கூட்டிக் கொண்டே றேடியோவிலே பாடவைக்க வேணுமென்று ஒருநாள் கதைச்சனாங்கள். அது தான்..." தங்கம் எப்போதோ பேசிக் கொண்டதை நினைவூட்டினாள்

"அண்ணை இந்தப் பிஞ்சுக் குழந்தை என்ன சொல்லுது பாத்தியளே...? மதனின் கேள்வி இது.

நான் நீதியைப் பார்க்கின்றேன் சூரிய ஒளிபட்டுத் தெறிக்கும் வெண்பனி பற்களைக்காட்டிச் சிரித்துவிட்டு வெளியே ஓடுகிறான் அவன்.

நான் கொழும்புக்கு வரமாட்டன் நான் கொழும்புக்கு வரமாட்டன். நான் வரமாட்டன்" என்று சத்தமிட்டவாறு அவன் வீட்டு மூலையில் போய் ஒளிந்து கொண்டான் அந்தச்சத்தத்தில் நம்மை மறந்தவர்களாக நாம் மூவரும் அப்படியே மௌனிகளாகிவிட்டோம்.

[யாவும் கற்பனை]

# இவ்வாரம் உங்கள் பலன்

மாதம் ஆவணி
திகதி 9 (1985-8-25) ஞாயிறு
திதி தசமி மு. இ. வரை
நக்ஷத்திரம் மூலம் பி. இ. வரை

## மேடம்

கருத்துவேற்றுமைகள் மறைவதற்கு இடமுண்டு. தங்கள் திறமைக்கு முன்பு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள். இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் கிடைக்கும்.

## இடபம்

இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்ட பயணம் குறித்துத் திட்டமிடப்படலாம். கடந்த கால சம்பவமொன்று எதிர்கால முன்னேற்றத்திற்கு வழியமைக்கும்.

## மிதுனம்

குடும்பத்தில் குறைகேட்க நேரிடும். சிலருக்கு விரக்தி தோன்றும். தவறுகளும் நடக்கலாம் நிலைதடுமாறும் நண்பர்களை காலை வாரிவிடக் கூடும். சிலருக்கு அன்னிய வாசம் உண்டு.

## கடகம்

நலன் தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும் பொருள் வரவில் திருப்தி தென்படும். பெரியோர்களின் ஆதரவும் உண்டு

## சிங்கம்

பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. காதலர்கள், எண்ணங்கள் கைகூடும். கைகொடுத்து உதவுவதற்கு உறவினர்கள் முன்வருவார்கள். காரியசித்தியும் உண்டு.

## கன்னி

தொழில்துறையில் நல் மாற்றங்கள் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகளும் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்திக்கு இடமுண்டு

## துலாம்

பொருள் வரவு, உபசாரம் பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்திகளும் இடமுண்டு இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். புதுத் தொழில் முறைகளை மனம் நாடும். இவ்வாரம் நீண்ட பிரயாணத்திற்கும் திட்டமிடலாம்.

## விருச்சிகம்

அவசரம் வேண்டாம். ஆபத்துக்கு இடமுண்டு பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். தற்பெருமைக்காக தவறான பாதையில் காலடி வைக்காதீர் தொழில் துறையிலும் தயக்கநிலை தென்படும் வேண்டாத தொடர்புகளால் தவறான போக்கிற்கு இடமுண்டு.

## தனுசு

சிறு விடயங்களுக்குக் கூட ஆத்திரப்பட நேரிடும் இனந்தெரியாத கவலையால் சோர்வடைவீர்கள். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றும். எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும். உடல் நலமும் பாதிக்கப்படலாம் சுகாதாரம் வேண்டும்

## மகரம்

எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். இன்னலின் பின்னர் சோர்வைத் தரலாம். வயிற்றுக் கோளாறுகளுக்கும் இடம் உண்டு. உணவு விடயத்தில் அவதானம் வேண்டும் எவ்விடயத்திலும் விழிப்புடன் நடந்து கொள்வது நன்று.

## கும்பம்

குடும்பத்தில் குதூகலம் தென்படும் வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு மூத்தோர்கள் உதவியும் நலன்தரும் சம்பவங்களும் இடம் பெறும். நீண்ட நாள் பிணக்கு இவ்வாரம் நிவர்த்தியாகும்.

## மீனம்

பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும் கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். புதியபொருள்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. வெளியிடத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

# புதிய புத்தகம்

நூல்: அரைகள்
ஆசிரியர்; சாந்தன்
வெளியீடு: ரஜனி தமிழ் நாவல் இதழ். யாழ்ப்பாணம்.

ஈழத்துச் சிறுகதை யுலகில் தனது தனித்துவமான சிந்தனையோட்ட எழுத்தால் தனக்கொரு தனியிடம் பெற்றுக் கொண்ட சாந்தனின் குறுநாவல்கள் இரண்டைக் கொண்டு அரைகள், என்றநூல் வெளியாகியுள்ளது அரைகள் நிலா என்ற இரு கதைகள் இடம் பெற்றுள்ளன. இதில் நிலா சிறுகதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அரைகள்:- கொழும்பில் வேலைபார்க்கும் யாழ்ப்பாணத்து இளைஞனின் மனப்பார்வையில் அவன் வாழ்வும் நடைமுறைகளும் அறிவு ரீதியாகச் சித்தரிக்கப்படுகிறது கொழும்பில் தனது மனைவியுடன் 'அனெக்ஸ்' ஒன்றில், தமிழரான வீட்டுச் சொந்தக்காருடன் வாழும் வாழ்க்கையும், ஒட்டுறவு அற்ற போலிச் சேர்க்கையும்' அதற்கு மாறாக ஆபீஸில் சிங்கள நண்பர்கள் மத்தியில் அவன் கொண்டுள்ள செல்வாக்கும் தொழிற்சங்கச் செயலாளர் போன்ற - அதே வேலையில் யாழ்ப்பாண தமிழ் ஊழியர்களிடையே சாதி வித்தியாசம் பாராட்டிப் பழகும் தன்மையும் - இவை எல்லாவற்றையும் மீறி வந்து போகும் இனக் கலவரங்களும் என்ன சொல்லுகின்றன? ஆய்வும், விமர்சனமாக முடிவு தேடி அலையும் முற்றுப் புள்ளிகள் தான் இந்தச் சின்னஞ்சிறு குறுநாவலின் அடிநாதம்.

வாழ்வின் அர்த்தத்தைத் தேடுவதைப் போன்ற பெரு முயற்சி: நகர வாழ்க்கையின் பொய்மை; இனவாதங்களிடையே முரண்பாடு எழும் நம்பிக்கைகள் ஓரினத்திடையே இயல்பாக எழும் வகுப்புப் பிரிவினைகள் பிரிவினைகளின் மூலவேர்களினிடையே இந்தச் சிக்கித் தவிக்கும் ஜீவிய மாந்தர்கள்.

அனெக்ஸ் வாழ்வின் ஒரு ஒட்டுறுதலைக் கோடிட்டுக் காட்டும் மைன - கண்டக்டராக வரும் தமிழரின் சிங்கள, தமிழ பரிவர்த்தனைகள், இவற்றையே மீறிய ஆபீஸுக்கு முன்னுள்ள கடை காரரின் மனோதைரியம் எல்லாமே வாசகர்களுக்கு எவற்றையோ சொல்லாமல் சொல்லி விளங்க வைக்க முனைகின்றன.

கொழும்பு நகர வாழ்க்கையை, அலுவலக நடப்புகளைச் சித்தரிப்பதில் சாந்தனின் கதைகள் பெரும் பங்கேற்கின்றன இவரின் பலசிறுகதைகள் இதனையே பின்னிக் கிடப்பன ஆரைகள் குறுநாவலைப் படிக்கும் போது இவரின் 'கிருஷ்ணன் தூது' என்னும் நீண்ட சிறுகதையும் மல்லிகையில் இடம் பெற்ற கண்டக்டரின் கதையொன்றும் நினைவிற்கு வருவது தவிர்க்க முடியாது போகின்றது

நிலா இதுவும் முன்னையது போன்று, நனவோடை யுக்தி முறையில் எழுதப்பட்ட ஒரு வகை விவரணக்கதை பலசமயம் கதையா, கட்டுரையா என்ற மயக்கத்தைத் தருவது ஆனால் இக் கதையினூடாக ஆங்காங்கே நிலவைக் கூட ரசிக்க முடியாது சமூக, அரசியல், பொருளாதார உறவுகளின் தாக்கத்தை சிறப்பாக காட்டியுள்ளமை இதற்கு இலக்கிய அந்தஸ்தை நல்கிறது

இருகதைகளும் குறுகிய விமர்சன வரிகளினால் இனம் காண முடியாதவை; படித்தே அறிய வேண்டியவை. மலரின் நிர்வாண மென்மையை அணுகுவதுபோல்.

இவரின் இக் கதைகளில் Anti Short Story ப் பண்புகள் அதிகம் காணப் படுகின்றது. இத் தன்மை தமிழிற்கு புதியதல்லவாயினும் எழுத்தாளர்களும், வாசகர்களும் இவ்வகை எழுத்துக்களை அதிகம் நாடுவதில்லை காரணம் அவர்கள் எதற்கும் தொடக்கம்-வளர்ச்சி முடிவு இருக்கவேண்டும் என்று எண்ணிப் படித்தோ, எழுதியோ பழக்கப் பட்டவர்கள் இதனால் தான் அதிக பண்புடைய (Melo Drama) உணர்ச்சி குறைந்த முடிவு கொண்ட கதைகளில் லயித்துப் போனவர்கள் இவர்களுக்கு திடுக்கிடும். சுவாரஸ்யமான சம்பவங்களோ, விறுவிறுப்பான நடையோட்டமோ, பழக்கமானகளமோ, உரையாடல்களோ அற்ற இந்த எழுத்துக்கள் பரிச்சயமாக இருக்க மாட்டாது.

இக் கதைகளைப் படிக்கும் போது நூலாசிரியரின் சொந்த அநுபவங்களின் வெளிப்பாடு துருத்திக் கொண்டு நிற்பதை போன்ற உணர்வு ஏற்படுகிறது. அனுபவங்களைப் பொதுமைப் படுத்தாமல் அதை தனியனுபவங்களாகவே நிற்பதால் பலருக்கு 'இலக்கியத் தனம்' அற்றதாகவும் தென்படலாம் ஆனால், இக்கதைகளை மேலோட்டமாகப் பார்க்கும் போது தனியனுபவங்களாக (Personel) தென்பட்டாலும் ஆங்காங்கே தெறிக்கும் உண்மைகள் அனுபவங்களுக்கு இலக்கிய அந்தஸ்தை இயல்பாகவே வழங்கி விடுகின்றன.

'செம்பியன் செல்வன்'

# தனி நாயகன்



யேசுவின் ஞானம் பற்றித்
திருமறை போதம் தாங்கித்
தேசுடன் தமிழ் இனத்தின்
திகழ் பெரு துறவியாகி
மாசிலாக் குருத் துவத்தின்
மகத்துவம் காட்டி எங்கும்
தூசணுய்த் தமிழ் பரப்பி
துலங்கிலே நாமம் வழி
நாமத்தில் தமிழர் என்னைக்
கொண்டு நாம் வாழும் காலை
தேனினுக்கு தமிழை எந்தத்
தேசத்தும் பரப்பி வைத்தாய்
பூமியிற் பெருமை கொண்டாய்
புலவர் போற்றுதலைப்பெற்றாய்
மாமனி தமிழுக்காகப்
பல்வகைத்தொண்டு செய்தாய்
தமிழ்வளம் காட்டி இந்தத்
தரணியில் எங்கள் அன்னை
அமுதினும் சுவையாள்
என்றே
அந்நியர் கிறக்கம் கொள்ள
புதுமைசேர் நூல்கள் யாத்துப்
புவிபுகழ் மன்றம் செய்து
முதுமொழித் தமிழை எங்கும்
பெரும்புகழ் எய்தச் செய்தாய்

-நெடுந்தீவு லக்ஸ்மன்

# இடிஅமினுக்கு மனைவியர் ஐந்து! ஆசைநாயகிகள் 40 பேர்!! பிள்ளைகளோ 40 க்கு மேல்!!!

# இடி அமின் விசித்திர பெண்பித்தர்

உகண்டாவை ஆட்டிப் படைத்த இடிஅமின் தன் இச்சைப்படியெல்லாம் நடந்தார்; அவருக்குப் பெண்ணும் அரசியலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதே.

இடிஅமின், பெண்கள் விடயத்தல் பரந்துபட்ட வாழ்க்கையை வாழ்ந்தவர். எல்லாத் தேசத்திலும், எல்லா நிறங்களிலும் பெண்களையும் அவர் விரும்பி நாடினார். பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை அவரது பாலியல் வாழ்க்கை விரிவுபட்டிருந்தது.

இடிஅமினுக்கு அழகான ஐந்து மனைவிமார்; அதே வேளை, நாற்பதுக்கும் அதிகமான ஆசைநாயகிகள் நாற்பதுக்கு மேற்பட்ட பிள்ளைகள்.

அவரது முதலாவது மனைவியார் பெயர் 'மலியமு' [Malyamu]. அவளுக்கே அதிக பிள்ளைகள் இரண்டாவது மனைவி 'கே அட்ரோ' [Kay Adrow] அவளொரு பல்கலைக்கழக மாணவி; பார்வைக்கு அழகானவள். அத்தோடு அவளொரு கிறிஸ்தவப் பெண். கே அட்ரோவின் திருமணம், இடிஅமினின் சொந்த நகரமான அருஆ [Arua]வில் சிறப்பாக நடந்தது.

கே அட்ரோவையும் அவளது குடும்பத்தையும் நன்குஅறிந்து வைத்திருந்தவர் இடிஅமின். அவளைத் திருமணம் முடிந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. அமின் தனது மூன்றாவது மனைவியையும் தெரிவு செய்து கொண்டார். அதற்கிடையில் அவர் உலகில் பிரசித்தி பெற்றும் விட்டார், பிரசித்திபெற்ற பின் கைப்பிடித்த மனைவியே 'நோரா' [Nora] என்ற மூன்றாவது பெண்.

நோராவை மணந்த பின் இடிஅமின் சந்தித்த நான்காவது பெண் 'மெடினா'. அவளொரு நடன மாது நல்ல அழகி. உகண்டாப் பெண்கள் இயல்பாகப் பருமனானவர்கள். ஆனால் நோரா அதற்கு எதிர்

கோப்பாய் பிரபா

மாறானவர். கண்டவுடன் காதல் கொள்ளும் பருவக் கவர்ச்சி அவளது சொத்து. அமினின் காமக் கண்களுக்கு அவளும் தப்பவில்லை. 1972ல் அவளையும் மணம் செய்து கொண்டார் இடிஅமின்.

1973-ம் ஆண்டு அவரது குடும்பம் நான்கு மனைவியரையும் பிள்ளைகளையும் கொண்டிருந்தது' ஆனால் 1974ம் ஆண்டு மார்ச்மாதம் 26ம் திகதி வானொலிமூலம் இடிஅமின் விடுத்தஅறிக்கையில் மலியமு, கே, நோரா ஆகியோரைத் தாம் விவாகரத்துச்செய்து விட்டதாகத் தெரிவித்திருந்தார் மலியமு, நோரா இருவரும் வியாபாரத்தில் ஈடுபட்டமையே விவாகரத்துச் செய்தமைக்குக் காட்டிய காரணமாகும். இவர்கள் 1973-ம்ஆண்டு ஆசிய பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டிருந்தமையும் உண்மையே. அந்த இருபெண்களும் பின்னர் ஆசைநாயகர்களைத் தேடிக்கொண்டார்கள்.



விவாகரத்து செய்து கொண்ட ஒரு மாத காலத்துக்குள் ஏப்ரல் 11-ம் திகதி மலியமு கடத்தல் நடவடிக்கை காரணமாகக் கைது செய்யப்பட்டாள். 'டொரோரோ' கென்யா எல்லை அருகில், [Tororo Kenya border] ஏப்ரல் 30-ம் திகதி நீதிமன்றத்திற்கு ஆஜார் செய்யப்பட்டுப் பின்னர் விடுதலைசெய்யப்பட்டாள்.

**பாவம் மலியமு...**

அந்தச் சம்பவம் முடிந்த அடுத்த வருடம் மார்ச் 13-ல் மலியமு கார் விபத்தில் சிக்கினாள். தனது சொந்தச் செலவிலேயே அவள் ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாள். இடிஅமினுக்கு இச்செய்தி கிடைத்ததும், 'அவள் இறந்து விட்டாளா?' என்று கேட்டார். மறுநாள் அவளைப் பார்க்க விரும்பினார்.



அமின் மனைவி
மெடினா

அவளைப் பார்த்த இடிஅமின் "நீயொரு அதிஷ்டமற்ற பெண்; உன்னால் வாழ்க்கையை ஒழுங்காக நடத்த முடியாது" என்று கர்ச்சித்தான். அங்கிருந்து அவளை அரசாங்க மருத்துவமனைக்கு மாற்றிவிடுமாறும் அவர் பணித்தார். பாவம், அவள் ஒருவாறு மூன்று வாரங்களில் சற்றுச் சுகமடைந்தாள்.

நவம்பர், 1975ல் அவள் லண்டனுக்கு விரைந்தாள். இடிஅமினிடமிருந்து தப்பிவிட வேண்டுமென்பதற்காகத்தான் பெற்ற ஆறு பிள்ளைகளையும் விட்டு அவள் லண்டன் சென்றாள். அவள் சென்றபின் அவளது கடையையும் இடிஅமின் உடைத்துத் தகர்ப்பித்தார்.

1974-ல் 'கே' (Kay) யை, இடிஅமினது பாதுகாவலர்கள் கைதுசெய்தார்கள் துப்பாக்கி வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்ட அவள் எவ்வளவோ வாதாடியும் கேட்காமல் நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டாள். "இது எனது கணவன் இடிஅமினுடைய துப்பாக்கி. இதை அவரே எனக்குக் கொடுத்தார்." என்று அவள் நீதிமன்றத்தில் தெரிவித்தாள். பின்னர் அவள் விடுதலையானாள்.

அதன் பின் அவளும் வாழவில்லை. ஆகஸ்ட் 13ம் திகதி அவள் இறந்து விட்டாள். 'கே'க்கு பாலு முகாசா (Mbalu - Mukasa) என்ற ஒரு டாக்டர் ஆசை நாயகனாக இருந்தார்

அவள் இறந்த செய்தி அமினுக்குத் தெரிவிக்கப்பட்டது அவருக்கு அதுவொன்றும் பெரிதாகத் தோன்றவில்லை அவளது கால், கைகள் எல்லாம் தொகுதி தொகுதியாக வெட்டப்பட்டிருந்தன அதைக்கூட ஒரு வைத்திய நிபுணரே செய்திருக்க வேண்டுமெனக்கருதப்பட்டது.

அமின் அவளது பிரேதத்தை 4 தொடக்கம் 8 வயது வரையுள்ள அவளது மூன்று பிள்ளைகளையும் அழைத்து வந்து காட்டினார். அந்தப் பிள்ளைகளைப் பார்த்து அவர் "பார் உனது அம்மாவை கெட்ட நடத்தைக்கு அவளுக்குக்கிடைத்த தண்டனை" என்றார். அவளது ஊரான 'அருஆ'க்கு 'கே'யின் உடல் விமான மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. இறப்புக்குக் கருச்சிதைவும் ஒரு காரணமாக இருந்தது. இவளது மரணத்தைத் தொடர்ந்து 'கே'யின் ஆசைநாயகன் பாலு முகாசாவும் தற்கொலை செய்து கொண்டார்.

நோரா, எல்லோரிலும் சொத்து வைத்தவள். அவள் மட்டும் ஒருவாறு அவரது அசுர பிடியில் இருந்து தப்பி லிபியாவுக்குப்போய் தனது குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டாள்.

1975ல் அமின் சென்ற கார் ஒரு விபத்தில் சிக்கியது. கம்பாலாவில் நடந்த இந்த விபத்தில் எவருக்கும் ஒரு சிறு காயம் கூட ஏற்படவில்லை. ஆனால் இது தனது மனைவி மெடினா (Medina)வின் சதியென்றே அமின் எண்ணினார்.

அவளை அடித்துச்சித்திரவதை செய்தார். அவளது கை மணிக்கட்டு முறிந்தது. இறுதியில் கார் விபத்தில்தான் கை முறிந்ததென்ற கதையைப்பரப்பினார். வெகுநாட்கள் சென்றும் அவள் பூரண சுகமடையவில்லை ஆனாலும் மற்றமனைவியரை விட அவருக்கு மெடினாவிலேயே அதிக விருப்பம்!

ஐந்தாவது மனைவியாக அவர் கைகளுக்குச் சிக்கியவள் சாரா கெலாபா (Sarah Kyolaba) 18 வயது நிரம்பிய இவள் ஒரு நடனக்காரி (go-go dancer)

இவளுக்கு 1974 கிறிஸ்மஸ் தினத்தன்று ஓர் ஆண் குழந்தை பிறந்தது அதை அமின் வானொலியிலும் அறிவிக்கச்செய்தார். ஆனால் தாயின் பெயர் அறிவிக்கப்படவில்லை. உண்மையிலேயே அக்குழந்தை 'சாரா'வின் காதலனுக்கே பிறந்தது

இவ்விஷயம் இடி அமினுக்குத் தெரியவந்தது. சாராவின் காதலனைக்கொலைசெய்ய அமின் பணித்தார். அதன் பின் சாரா உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தாள். சாரா தனது காதலனையே நினைத்து ஏங்கினாள்

அமினின் வாழ்க்கையில் 'சாரா'வின் பங்களிப்புச்சுவையாக இருக்கவில்லை.

உகண்டா நாட்டுப்பெண்கள், இடி அமினை 'காமப் பிசா'சாக நினைத்து அஞ்சினார்கள் பலரின் குடும்பவாழ்க்கையிலும் குறுக்கிட்டார். இவர் ஆட்சியில் இருக்கும் வரை அந்நாட்டு பெண்கள் நிம்மதியாகத்தூங்கவில்லை.

# பத்திரிகையாளர் கதிரவேலு

யாழ்ப்பாணத்தின் முது பெரும் பத்திரிகையாளரும் சமூக சீர்திருத்த வாதியுமான முத்தையா கதிரவேலுவை 1920 ம் ஆண்டுகளில் தீவிரமாகஇயங்கிய இளைஞர் காங்கிரசை ஆரம்பித்த நாட்டுப்பற்றும் சுதந்திர வேட்கையும் கொண்ட தேசாபிமானிகளால் மறக்க முடியாது. 'இவ்விளைஞர் காங்கிரஸ்" அதன் குறிக்கோளாலும் செயற்பாட்டாலும் தேசிய காங்கிரசிலும் பார்க்கச் செல்வாக்கும் மக்கள் ஆதரவையும் பெற்றது. இத்தகைய பலம் வாய்ந்த இந்த இயக்கத்தில் ஒரு முக்கியஸ்தராக அதனை உருவாக்கிய காலஞ்சென்ற கல்விமானும் அரசியல் ஞானியுமான திரு. ஹன்டி பேரின்பநாயகத்தோடு ஆரம்பத்திலிருந்தே தோளோடு தோள் நின்று உழைத்தவர் திரு கதிரவேலு.

கதிரவேலு தனதுகல்வியை; பலதுறை விற்பன்னர்களை உருவாக்கிய உருவாக்கிக் கொண்டிருக்கும் யாழ். இந்துக்கல்லூரியில் கற்றார். திரு. சஞ்சீவராவ், நெவின்ஸ் செல்வத்துரை போன்ற புகழ் பெற்ற அதிபர்கள் கடமையாற்றிய காலத்தில் அவர்களிடம் கல்வி பெறும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. இவர் நல்ல பேச்சாளர். எழுத்துத்துறை அவருக்குக் கை கண்ட கலை. அவருடைய பேனா அன்றைய சமூக ஊழல்களைச் சாடத் தயங்கவில்லை. தீண்டாமை போன்ற சமூகப்பிரச்சினைகளை தேசிய காங்கிரஸ் அணுகவில்லை. இளைஞர் காங்கிரஸ் தீண்டாமையை ஒழிக்கச் சொல்லாலும் செயலாலும் அயராது உழைத்தது. சமபந்தி போசன ஆலயப்பிரவேசம் போன்ற இளைஞர் காங்கிரஸின் நடவடிக்கைகளில் கதிரவேலு தீவிர பங்கு கொண்டார்.

மேலும் சைவபரிபாலன சபையில் நீண்டகால அங்கத்தவராக இருந்த இவரை இவரது நண்பர் திரு. எஸ். அட்சலிங்கம் சபையின் வெளியீடான இந்துசாதனம் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் சேவைசெய்ய அழைத்தார். எழுத்தாற்றல்மிக்க இவர் இப்பணியில் தன் சிறிய தந்தையாரான "சேக்ஸ்பியர்" நாகலிங்கத்துடன் ஈடுபட்டார்.

திரு. கதிரவேலுவின் பத்திரிகைத்துறை அனுபவத்தை அறிந்த ஏரிக்கரைப் பத்திரிகை ஸ்தாபகர் திரு. டி.ஆர் விஜயவர்த்தன இவரை யாழ் மாவட்டம் முழுவதற்கும் ஏரிக்கரைப் பத்திரிகையில் சிறப்புநிருபராக நியமித்தார் பத்திரிகைத்துறையில் தனிப் பற்றுக்கொண்ட அவர் இத்தொழிலை ஊதியம் பெறும் தொழிலெனக் கருதவில்லை புனிதமான ஓர் தொழிலாகவே கருதினார். உண்மை புனிதமானது என்பது இவரது கொள்கையாதலால் எந்த அரசியல் வாதியையும் ஆதரித்தோ அல்லது யாருக்கும் மாறாகவோ எழுதமாட்டார்.



எளிமையான நடை உடை, பாவனைகளைக் கொண்ட இவர் ஒரு காந்தியவாதி அண்ணல் காந்தியும், முதுபெரும் அரசியல் ஞானி ராஜாஜியும் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவர்களின் தொடர்பும் நெருங்கிப்பழகும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது.

உண்மை நேர்மை எளிமையான வாழ்க்கை ஆகிய பண்புகளைக் கொண்ட இவர் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளைத் தன் குருநாதராகக் கொண்டவர்.

வீரவாகு பொன்னுத்துரை

## வரப்பெற்றோம்

வ. சிவச்சந்திரனால் தொகுக்கப்பெற்று வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்க வெளியீடாக "தட்டெழுத்துப் பரீட்சை வழிகாட்டி" என்னும் நூல் வெளிவந்தள்ளது. தட்டச்சு கருக்கெழுத்துப் பயிலும் மாணவர்க்குஇது பெரிதும் பயன் தரும்.

## மகான்களின்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாவலர்கள் பண்ணாரப்
பாடக்கேட்டேன்
பராபரையின் சந்நிதியில்
யாவும் கண்டேன்"

என்பது சிறியேன் அனுபவமாகும் இவ்வனுபவம் இங்கு வந்து வழிபாடு செய்யும் அனைவருக்கும் பிறக்கும் என்பதில் ஐயமில்லை. ஆண்டுதோறும் மகோற்சவகாலம் இவ்வாலயத்தில் எழுச்சிமிக்க காலமாகும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காபுரம் மகளிர் இல்லம், துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை ஆகியவை நாள் முழுவதும் இங்கு தங்கிப் பணிபுரியும். நாள்தோறும் ஆயிரமாயிரம் அடியவர்களுக்கு அன்னம் பாலித்தல் இடம்பெறும். இம்மாதம் 17ந்தேதி ஆரம்பமான கொடியேற்று விழா 27ந்தேதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவம் நடைபெற்று 28ந்தேதி புதன்கிழமை தீர்த்த உற்சவத்தோடு நிறைவு பெறும் இந்நேரத்தில் துர்க்காதேவியின் திருவருள் அனைவரையும் வாழ்வித்து நிற்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.


## இன்று சந்நிதி முருகன் பூங்காவனம்

ஒருகோடி துயர மெய்மை
ஓயாது வருத்த நந்தோச
வருகோடி அடியார்க் கென்றும்
வளர்கோடி இன்னல் தீர்க்கும்
அருகோடி வரும் ஆற்றில்
அமர்ந்திருக்கும் சந்நிதியோனே
தருகோடி மகிழ்ச்சி தந்தே
தமியேனைக் காத்தருளையா

— சிங்கை ஆழியான்

# இராஜராஜசோழப்பேரரசன் —8

# அருள்மொழித்தேவன்



## க.சி.குலரத்தினம்

உத்தம சோழன் 985-ம் ஆண்டில் மறைந்ததும், முன்னரே ஆட்சிக்குரியவனுயிருந்தும் அவ்வுரிமையைத் துறந்து உத்தமசோழனுக்கு விட்டுக் கொடுத்து, இளவரசனாய் பதினைந்து ஆண்டுக்காலம் அரசகாரியம் பார்த்துவந்தவனாய் அருள்மொழித் தேவனே உரிமை வாயிலாகவும், உடன்படிக்கை வாயிலாகவும் அரசனாயினன். அந்த உடன்படிக்கையில உத்தமசோழன் தனக்குப்பின் அரசாளும் உரிமையை அருள்மொழிக்கே உரியதாகும் என உறுதிகூறி எழுதியிருந்தான்.

உத்தம சோழனுக்கு மதுராந்தக கண்டராதித்தன் என்னும் மைந்தன் இருந்தான். அவன் தன் தந்தை சொற்கேட்டு ஆளும் உரிமை வேண்டாமென ஒதுக்கிக் கொண்டு, தந்தையின் ஆட்சிக் காலத்தில் பாட்டனார் கண்டராதித்தர் போலத் திருக்கோயிற் பணிகளை மேற்பார்வை செய்துவந்தான். மதுராந்தகன் கண்டராதித்தன் என்னும் பெயரை இருவர் பெயர்களாக்கி, உத்தம சோழனுக்கு மதுராந்தகன் என்றும் கண்டராதித்தன் என்றும். மைந்தர் இருவர் இருந்தனர் என ஆராயும் வரலாற்றாசிரியர்களும் இருக்கிறார்கள்.

அருள்மொழித் தேவனைச் சிலர் அருள்மொழிவர்மன் எனவும் வழங்குவதுண்டு. அவனுடைய இளமைப்பெயர் அதுவாகலின் அப்பெயரோடு தான் அவன் பட்டத்துக்கு வந்தான். இராசகேசரி என்பது அவன் புனைந்த விருதுப் பெயர்.

முன்னர் முதற் பராந்தகன் காலத்துக்குப்பின் நாட்டின் நிலைமை மாறியமைவதாயிற்று. முன்னர் பணிந்து அடங்கியிருந்த பாண்டியர் இடைக்காலத்தில் வீரமுறுக்கேறி ஈழநாட்டரசன் உதவியுடன் தலைநிமிர்த்தியதும் உண்டு. சேரநாட்டினன் சிறந்த கப்பற்படையுடையவனாய்ப் பெருவலி படைத்தவனாயிருந்தான். வடக்கேயும் முன்னர் தலை தாழ்த்தியவர்கள் தலை நிமிர்ந்ததும் உண்டு.

இத்தகைய சூழ்நிலையில் அருள்மொழித் தேவன் தான் பதினையாண்டு இளவரசனாயிருந்து பெற்ற அரசியல் அனுபவத்தோடு, தனக்கு ஆதரவாகத் திரண்டிருந்த அருள் திறல் வீரர்களின் பக்கத்துணையோடு தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளில் ஆண்ட அரசர்களை வென்றடக்கி, இராசாக்களுக்கு இராசா என்னும் கருத்தில், இராசராசன் எனப் பெயர் பெற்றான் அவனுடைய முழுப் பெயரையும் கூறுவதாயின் இராசகேசரி இராசராசசோழப் பேரரசன் எனலாம்.

இராசராசனின் வீரப்பிரதாபங்களை விபரமாகக் குறிப்பிட்டு அவனைப் பெருவீரன் பேரரசன் என்று வருணிப்பதாயின் அது நீண்ட வரலாறாகும். எனவே முதலில் அவன் செய்த யத்தனங்களையும் போர்களையும் உடன்படிக்கைகளையும் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுப் பின்னர் வரலாற்று வரிசையில் விரிவாகக் குறிப்பிடுதல் வசதியும் வாய்ப்புமாகும்

முன்னர் இராசராசனின் முன்னோர்களால் செருக்கடக்கப்பட்ட மூவேந்தருள் ஒருவராய பாண்டியன் அமரபுஜங்கன் என்பான், பாண்டி நாட்டைப்பெரிப்பித்துப் தன்மைபெறச் செய்வதற்கானவகையில்படைகளைப் பற்றி ஈழநாட்டு அரசனின் பக்கத்துணையையும் படைத்துணையையும் பெற்றுப்பெரும் போருக்கு ஆயத்தமானான். அவனுடைய ஆரவாரங்களைத் திறமை வாய்ந்த ஒற்றர்கள் மூலங்கேட்ட அருள்மொழி, தன் வீரப் படைகளுடன் சென்று பாண்டியன் மீது புலியெனப் பாய்ந்து அவன் செருக்கினை அடக்கி, தென்னபராக்கிரமன் என்னும் விருதுப் பெயர் பெற்றான்.

அப்பால் குடமலை என்னும் மேற்குப் பகுதியில் பாய்ந்து குடமலைப் பகுதியையும் வென்று, அதற்கு அப்பால் நுளம்பபாடி என்னும் பெரிய பிரதேசத்தையும் வென்று கொண்டான். நுளம்பபாடி என்னும் பெரும் பிரதேசமாவது சேலம், வடஆர்க்காடு, பெல்லாரி, கோலார், தும்கூர் மாவட்டம் முதலான இடங்களைக் கொண்டமைந்ததாகும் அதன் பின் மைசூர்ப் பிரதேசங்களான கங்கைபாடி, தடிகைபாடி ஆகிய இடங்களையும் கொண்டான். மைசூர்ப்பகுதியில் தன் பெயர் நிலைக்க இராசராசபுரம் என்னும் பெரிய நகரத்தையும் அமைத்தான்.

முன்னர் பராந்தகன் பாண்டியருடன் போர் புரிந்தபோது பக்கத்துணை வந்த சிங்களச் சகோதரப் படை பட்டபாடு பெரிது. சிங்கள மன்னனே அநுராதபுரத்தை விட்டுத் தென் திசைக்குச் சென்று உருகுணைப் பிரதேசத்தில் ஒதுங்கி ஒடுங்கி இருந்தவாறே மீண்டும் பாண்டியருக்கு உதவி செய்யும் மனப்பான்மையில் கரந்து வினை யாற்றியதால், இராசராசனுடைய படைகள் அநுராதபுரத்தை முற்றுக உருக்குலைத்து, அப்பால் பொலநறுவை வரை சென்று இங்கு அவர் தம் செருக்கினை அடக்கி தாம் கைப்பற்றிய பொலநறுவைப் பகுதிக்குச் சனநாதமங்களம் எனப் பெயரிட்டனர். சனவிநோதன், சனநாதன் என்பன இராசராசனின் செல்லப் பெயர்கள். மக்கள் கவி, மக்கள் தலைவன் என்றாற் போல, சனங்களின் அபிமானம் அன்பு நேயத்துக் குரியவன் அருள்மொழி என்பதால் அவனுக்கு சனநாதன் என்னும் பட்டம் பரவலாக வழங்கலாயிற்று. பொலநறுவையை சனநாதமங்கலமெனவலுப் படுத்திய சோழர், வட பிரதேசமெங்கும் குடியேற்றங்களை ஊக்கப் படுத்திச் சைவம் வளரச் சிவன்கோவில்கள் பல வற்றைக் கட்டினார்கள். இத்தலைய திருக்கோயில்களுள் பொலநறுவையில் அமைந்த வானவன் மாதேவி ஈஸ்வரமும், மாதோட்டத் தமைந்த இராசராச ஈஸ்வரமும் வெகு சிறப்பு வாய்ந்தனவாகும். வடபாகத்தில் சோழர்களின் பெயர் வழங்குமிடங்களுள் வளவர் கோன் பள்ளம், செம்பியன் பற்று என்பன சோழரையே குறிப்பனவாகும். சோழர் தொடர்பு முன்னரும் உண்டானமை நினைவிற் கொள்ள வேண்டிய தொன்றாகும். வடக்கிலங்கை யெங்கும் சோழர் பலர் குடியேறிச் சீரிய வாழ்வு வாழ்ந்தமை, அவர்களிற் பலர் சிங்களவரின் வழிபாட்டுக் கோயில்கள் கட்டிய கைவரிசை கை வண்ணத்தால் அறியலாம். சோழர் பாண்டியரையும், ஈழத்தவரையும் வென்றமையால் மும்முடி சூடியவராயினர் எனவே இலங்கைக்கு மும்முடிச் சோழ மண்டலம் என்பது பெயராயிற்று நாளடைவில் இலங்கை முழுதும் சோழப் பேரரசில் ஒரு மாகாணம் என அமைந்ததும், பின்னர் சிங்கள மன்னர் இரந்து கயநிர்ணய முறையில் ஆளத் தொடங்கிச் சுதந்திரம் பெற்றதும் மறைக்கமுடியாதவரலாறு இவ்வாறே முன்னர் பராந்தகன் பாண்டியனை வென்று சோழ பாண்டிய மன்னனை இருமுடிச் சோழன் என வழங்கினன் என்பது தெரிந்ததே.

வடஇந்தியாவில் கோதாவரி ஆற்றுக்கும் கிருஷ்ணை ஆற்றுக்கும் இடைப்பட்ட வேங்கை நாட்டில் இராசராசனுடைய அதிகாரமும் செல்வாக்கும் பெருகியமை கண்டு வெகுண்டெழுந்தவர்களுள் கீழைச் சாளுக்கிய மரபின் ஒரு பகுதியினராவர் சாளுக்கியருள் இருபகுதியார் அதிகாரத்துக்காகப் போட்டியிட்டபோது, ஒருபகுதியினரின் தலைவனை சத்தியவர்மன் என்பானோடு இராசராசன் நட்புப் பூண்டு அவன்சார்பில் வேங்கை நாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது, சத்தியாசிராயன் என்பவனோடு போர் புரியவேண்டியதாயிற்று. போரில் வெற்றிபெற்ற இராசராசன் சத்தியவர்மனை அரசனாக்கியதோடு, அவன் தம்பி விமலாதித்தன் என்பானை இளவரசனாக்கி முடிசூட்டியதோடு விடாது, தன் அருமை மகள் குந்தவை என்பாளை அவனுக்குத் திருமணஞ் செய்துவைத்தான். ஐரோப்பிய மன்னர் எவரும் அக்காலத்தில் செய்திராத திருமண உறவு உடன்படிக்கையை(Marriage Alliance) இராசராசன் செய்து வைத்தான்.

இராசராசன் படைகள் மேற்குக் கடலில் உள்ள மாலைதீவுகளைப்பிடித்தமை அவனுடைய கடற்படை வலிமையைக் காட்டுகிறது. மாலைதீவுகள் அக்காலத்தில் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் என வழங்கின. முந்நீர் என்பது கடலின் பெயர்களில் ஒன்று. அது ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீரால் நிரப்பப்பெற்றது.

இவ்வாறாக இராசராசன் பெற்ற பெருவெற்றிகளையும் அவன் பெற்ற விருதுப் பெயர்களையும் பிற புகழ்களையும் பிற்காலத்தவர் அறிந்து கொள்வதற்காக அவன் கையாண்ட புது முறையொன்று மெய்க்கீர்த்தி பொறிக்கும் முறையாகும் அது சாதாரண கல்வெட்டுகள் போலல்லாது மன்னனின் ஆட்சியாண்டு, நாட்டின் நிலைமை அரச உத்தியோகத்தர் முதலிய விபரங்களை அடக்கியதாய் வரலாற்று அத்தியாயம் போல அமைந்ததாகும். இங்ஙனம் வழிகாட்டியாக அவன் வகுத்த புதியமுறையில் அவன் புகழ் கூறும் மெய்க்கீர்த்திகள்பலவும் ஸ்வஸ்திஶ்ரீ.. எனத் தொடங்கி, மங்கலகரமாக வாழ்த்துக்கூறி முடிவனவாகும்.

ஸ்வஸ்திஶ்ரீ... ஏதத்விச்வந்ருபச்ரேணி மௌளி மாலோபலாலிதம் சாசனம் ராஜஸ்ய ராஜகேஸரி வர்மண:- (இவை கிரந்தஎழுத்தில் உள்ள பகுதி)

தொடர்ந்து செந்தமிழில் வருவன:

"திருமகள் போலப் பெருநிலச்
செல்வியுந்
தனக்கேயுரிமை பூண்டமை
மனக்கொளக்
காந்தளூர்ச்சாலை கலமறுத்
தருளி வேங்கைநாடுங்
கங்கபாடியுந் தடிகை பாடியும்
நுளம்பபாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங்
கலிங்கமும்
முரட்டெழில் சிங்களர் ஈழ
மண்டலமும்
இரட்டைபாடி ஏழரை
இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு
பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித்
தண்டாற் கொண்ட
தன்னெழில் வளருழியுள்
எல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே
செழியரைத்
தேசுகொள்... மன்னன்
கோ ராஜகேஸரி வர்மரன
ஶ்ரீ ராஜராஜ தேவர்க்கு...

ஆக இப்படி உடையார் ஶ்ரீ ராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது...

இந்த வரன் முறையைப் பின்பற்றியே பின்வந்த சிங்கள மன்னர்களும் கல்வெட்டு எழுதிய செய்தி, கல்வெட்டுகளாலேயே அறியக்கிடக்கிறது: உதாரணமாக விசயபாகுவின் கல்வெட்டு,

"நமோபுத்தாய, ஶ்ரீலங்கா த்வீபத்து, சூர்ய வம்சத்து, இஷ்வாகுவின் வழிவந்த, அனேகசத்துருவிசயம்பண்ணி, அநுராதபுரம் புக்கு, புத்தசாசனம் ரக்ஷிக்க வேண்டி, சங்கதிரோகத்தால் திருமுடி சூடி, அருமநத்தில் நின்றும் சங்கத்தாரை அழைப்பித்து மூன்று நிகாயத்துக்கு சங்கசுத்தி பண்ணுவித்து...அறம்மறவற்க ஸ்வஸ்திஶ்ரீ

[வளரும்]

## இதுவரை?

அறுபதுஆகிவிட்டது;இனிமேல் போகிற இடத்துக்கு நல்லவழி தேடவேணடுப என்று சொல்லுகிறார்கள் இவர்கள் இனி மேல் என்று கூறுவதால் இது வரை அப்படி ஒன்றும் பண்ணவில்லை என்பதைஒத்துக்கொள்கிறார்கள்.

இந்த அடிப்படைத் தவறினைக் கண்டித்து இவ்வுலகில் நல்லபடி வாழ முயற்சி செய்யும் போதே போகிற இடத்துக்கும் நல்ல வழி தேடலாம் என்பதை உணர்த்தவே 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்வைகலும், எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை' என்று திருஞான சம்பந்தர் பாடியுள்ளார்.

(அ. ச. ஞா)

## கலிபோர்னியா...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்பதில் ஆர்வம்காட்டி தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.


# 31-ம் நாள் நினைவஞ்சலி

## திரு. நமசிவாயம் இராசரத்தினம்

[சீமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை]



தோற்றம்: 18-06-1923

மறைவு: 26-07-1985

இதயத்தின் ஒளிவிளக்காய் எம்மையெல்லாம் வழி நடாத்திச்சென்ற ஒளிவிளக்கே, மறைந்து ஒரு மத மாகியும் உம் நினைவு எம் நெஞ்சில் நிழலாடுகிறதே. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இன்றைய நாளில் பிரார்த்திப்போமாக.

பிள்ளையார்கோவிலடி, மயிலிட்டி.

அன்பின் மக்கள் மருமகன் (217)

Computer Programming & Data Processing Course

C. C. E A/L பரீட்சைக்கு இம்முறை தோற்றிய மாணவர்களின் வசதிக்காக விஷேச வகுப்பு

30-8-85 வெள்ளி 9 மணிக்கு ஆரம்பமாகும்.

மேலும் விபரங்களுக்கு:

Cantabia Institute
21, Main Sreet,
Jaffna.

T' Phone: 24201

**நியூ சினிமாலயா**
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
**INTRUSION CAMBODIA**
பல ஆயிரக்கணக்கான இளைஞரின் வேண்டுகோளுக்கிணங்க புத்தம் புதியபிரதியாக வெளியிடப் பட்டுள்ளது.

**மே ஃபெயர் மினி சினிமா**
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
**"Basket Case"**
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

**S.T.L. மினி சினிமா**
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி, பானுமதி நடித்த
**கள்வனின் காதலி**
22, 23 திகதிகளில் கமல், அம்பிகா நடித்த
**உயர்ந்த உள்ளம்**

**சரவணபவன் மினி சினிமா**
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-15, 4-30, 7-00
**UNCOMMON VALOUR**
கேணல் ஜேசன் ரொட்ஸ் என்பவர் வியட்நாமில் காணாமல்போன தன் மகனைத் தேடி கெரில்லா பயிற்சி பெற்ற வீரகளுடன் செல்கின்றார். அங்கு நிகழும் மோதல்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. Hell Cats, Code Name Wild Geeseக்குப் பின் மீண்டும் ஒருவிருந்து Action-Packed-Adventure

**பாலகன் V.V.**
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
**LONGEST BRIDGE**
1937-ல் ஜப்பான் முப்படைகளாலும் சீனாவை தாக்கியபொழுது யார் வெற்றிபெற்றார்கள்? படம் துவங்கி முடியும் வரை ஒரே வேட்டு சத்தங்கள் ஏன்?

**வெலிங்டன்**
10-30, 2-15, 4-15, 6-30 p.m.
புறாசிலி நடித்த
**THE DRAGON DIES HARD**
கராட்டி Film
தவிர்க்க முடியாத காரணத்தால் காண்பிக்க முடியாத படம் இன்று முதல் காண்பிக்கப் படும். பயங்கரக் கராட்டிச் சண்டைகள் நிறைந்தது.
முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காண்பிக்கப் படுகிறது.

**விடியோ சினிமா**
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
தியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், இலக்ஷ்மி, ஜெய்சங்கர் நடித்த
பாலு மகேந்திராவின்
**நீங்கள் கேட்டவை**
கலைக்கனி

இரண்டாவது ஜனத்திரள் நிறைந்த வெற்றி வாரமாக காட்சியளிக்கிறது.
**ஸ்ரான்லி மினி**
"X5" திரைவானில்
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
**LAST ORGY**
ஹிற்லர் ஆட்சியில் நிவிரவாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

**நியூ சாந்தி மினி**
10-30, 2-30, 4-30, 6-30
**A Pair Girl**
சதிக் கூட்டம் ஒன்று வேலைதேடி வருவதாக இளம் பெண்களை கூட்டி வந்து தகாதநடத்தையில் ஈடுபடவைக்கிருர்கள். அவர்கள் முயற்சி பலித்ததா என்ன நடந்தது?
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.
(Adults ony)

**ராஜா தியேட்டர் யாழ்ப்பாணம்**
தினசரி 10-30, 2-30 6-00
முத்துராமன் - ஜெயலலிதா தங்கவேலு
**கணவன் மனைவி**

**"லதா" மினி**
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
M.G.R. வைஜந்திமாலா
**பக்தாத் திருடன்**

**லிபேர்ட்டி மினி**
வெலிங்டன் சந்தி அருகாமை
10-30, 12-30, 2-30, 4-45
**"HELLCATS"**
வயது வந்தவர்கள் மட்டும்

**உஷா மினி**
10-30, 2-30, 4-30, 6-30
**CODE NAME WILD GEESE**
2 தினங்கள் மட்டும்


# நாடு கடத்தும் உத்தரவுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பேச்சாளர் டாக்டர் எஸ் ஏ பாலசிங்கத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்ற பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு குறித்து ஈழ தேசிய விடுதலை முன்னணி தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு இம்முன்னணி அனுப்பியுள்ள செய்தியில் "திரு பாலசிங்கம் லண்டன் போய்ச் சேர்ந்தால் உடனடியாக இலங்கைக்கு அனுப்பும் வாய்ப்பு உள்ளது என்றும் ஆகவே அவரை இந்தியாவிலிருந்து வெளியேற்றும் உத்தரவை ரத்துச்செய்யவேண்டும் என்றும் கேட்டுள்ளது.

திரு. பாலசிங்கம் கடும் நீரழிவு நோயாளி. அவர் தொடர்ச்சியாக மருந்து சாப்பிடுபவர். அவரை உடனடியாக விடுதலைசெய்து இந்தியாவில் தொடர்ந்திருக்க அனுமதியுங்கள்" என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## பல தலைவர்கள் கோரிக்கை

தமிழ்நாடு காங்கிரஸை சேர்ந்த டாக்டர் ஏ. கே. ஜெய்னுதீன் பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கு அனுப்பி வைத்த தந்தியில் மத்திய அரசின் நாடு கடத்தல் உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் குழு உறுப்பினர் திரு. எஸ் பாலசுப்பிரமணியம், பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்த தந்தியில் வெளியேற்ற உத்தரவை ரத்துச்செய்யுமாறு கேட்டுள்ளார்.

தி மு க. தலைவர் திரு மு. கருணாநிதி விடுத்திருக்கும் செய்தியில்; மத்திய அரசின் உத்தரவு ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும்; இந்த நாடு கடத்தல் உத்தரவை உடனடியாக வாபஸ் பெறுமாறும் கோரியுள்ளார்.

இதே மாதிரியான கண்டனச் செய்திகளையும், வன்மையான எதிர்ப்புக்களையும் திரு. ப. நெடுமாறன், திரு இரா. செழியன் மற்றும் தமிழக அரசின் சில அமைச்சர்களும் நேற்று சென்னையில் வெளியிட்டனர்.

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை, டாக்டர். எஸ்.ஏ பாலசிங்கம் தமிழ்நாட்டில் எங்கு இருக்கிறார் என்ற விபரம் கிடைக்கவில்லை.


## நன்றி நவிலல்

**செல்லத்துரை சிவஞானசுந்தரம்பிள்ளை**
(உரிமையாளர்: நியூ விஜேந்திரா படமாளிகை அனுராதபுரம்)

எங்கள் அன்புத்தெய்வமும் எங்கள் அன்புத்தந்தையும், எங்கள் அன்பு மாமாவும், அன்புத்தாத்தாவுமாகிய

**செல்லத்துரை சிவஞானசுந்தரம்பிள்ளை**

அவர்களின் மரணச்சடங்கிலும் (18-7-85) அந்தியேட்டி சபிண்டிகரணக்கிரியையிலும் (17-8-85) சமூகம் தந்து ஆன்ம சாந்திக்கு பிரார்த்தனை செய்து உதவிகள் செய்து உதவியுள்ள அன்புச் சுற்றத்தார்கள் ஊரார்கள், அயலார்கள், அன்புமிக்க நண்பர்கள் அனைவருக்கும் எங்களின் அன்புநிறை நன்றியைத்தெரிவிக்கிறோம்.

வணக்கம்!

"வசந்தமாளிகை"
ஐயனார் கோவில் வீதி,
சுன்னாகம்.

இங்ஙனம்
மனைவி, மகன்மார், மகள்
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

215

## ஓராண்டு அன்பு நினைவஞ்சலி

**இராசரத்தினம் புவிராசா**



மலர்வு: 1977-02-02
உதிர்வு: 1984-08-25

கூரிய அறிவும், நேரிய நடையும், வீரிய போக்கும் கரிய நிறைவும் தன்னகத்தே கொண்ட எம்குலக் கொழுந்தே!

இறைவனடிசேர அன்பு கூறி இதய அஞ்சலி செய்கிறோம்.

அம்மா, அப்பா, அண்ணன்மார், அன்புக் கலா அக்கா மற்றும் இனசன பந்துக்கள்.

(204)
உப தபால்நிலையம்,
கோப்பாய் வடக்கு.

28-8 85 இல் யாழ். நகர் சாந்தி சினிமா முன் மேல்மாடியில்

## புதிய வகுப்பு ஆரம்பம் J.E.C. இல்

★ **பிட்மன் தமிழ்/ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து**

90 மணிநேர / 6 மாத கால வகுப்பு
[மின் இயக்கத் தட்டச்சு பயிற்சியும் வழங்கப்படும்]
(மாணவர் வசதிக்கேற்ப வகுப்பு)

★ **Book - Keeping and Accounts - Elementary**
லண்டன் பரீட்சை ஒழுங்குகளுடன்

★ **6 மாத கால Spoken English**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள்:

நிர்வாகி – சங்கர்
யாழ்ப்பாண கல்வி நிலையம்
22, இராமையாச் செட்டியார் வீதி,
சாந்தி சினிமா முன்னுள்ள மேல் மாடி, யாழ்ப்பாணம்.

இயக்குனர்
பிறிலியன் அக்கடமி
பிரதான வீதி,
பருத்தித்துறை.
வதிரிச்சந்திக்கருகில்
வதிரி, கரவெட்டி.

தமிழ், ஆங்கில, ரோனியோ, தட்டச்சு வேலைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். (213)

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை (PRIMARY HEALTH CARE) செய்வதற்கு ஊக்கமிக்க, முயற்சியுள்ள ஒரு பட்டதாரி அல்லது அதற்கு சமமான தகுதியுள்ளவர் தேவை. சமூக/தொண்டர் சுகாதார வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயிற்சியும் கல்வியும் அளிப்பதும் ஒழுங்கு செய்வதும் வேலையில் அடங்கும் போஷாக்கு/சுகாதார அறிவுள்ளவர்கள் தகைமை கவனிக்கப்படும். இது ஒரு ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்கு நல்ல சம்பளத்துடன் அமையும். உடனே விண்ணப்பிக்கவும்:

பேராசிரியர் த. ராமதாஸ்,
குழந்தை வைத்தியத்துறை. அரசினர் வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (178)

# சங்கு மார்க்!

## எவர்சில்வர் பாத்திரங்கள்

மொத்த சில்லறை விற்பனையில்...

இல்லத்தரசிகளின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற உறுதியும் உத்தரவாதமுமிக்க "சங்கு மார்க்" எவர்சில்வர்ப்பாத்திரங்கள் ஆண்டுகள் பலவானாலும் அதன் பளபளப்புகள் குன்றுவதில்லை.

இதனால் எமது உற்பத்திகளான "சங்கு மார்க்" எவர்சில்வர்ப் பாத்திரங்கள் பரம்பரை காலத்திற்கு உத்தரவாதமளிக்கின்றன.

அமோக விற்பனையையும் பாவனையாளர்களின் நன்மதிப்பையும் பெறும் வியாபாரிகள் தெரிவு செய்வது "சங்கு மார்க்" எவர்சில்வர்ப்பாத்திரங்களையே!

'தொழிற்சாலையிலிருந்து நேரடியாக விநியோகிப்பதால் வியாபாரிகளுக்கு அதிவிஷேட கழிவுகள் வழங்கப்படுகின்றன.'

காட்சியறை:

# செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்

**118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 22054

4421

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

# முல்லைத்தீவில் ஹெலிகாப்டர் தாழப்பறந்து துப்பாக்கிப்பிரயோகம்

## தீவிரவாதமுகாம் முற்றுகையிடப்பட்டதாம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் மாமூலை, கணுக்கேணி, தண்ணீரூற்று ஆகிய பகுதிகளில் ஆயுதப் படையினர் நேற்று முன்தினம் ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்த பெருந் தொகையான மக்கள் அந்த இடங்களில் இருந்து வெளியேறி வேறு இடங்களுக்குச் சென்றனர்.

நேற்றுமுன் தினம் மாமூலைப் பகுதியில் ஹெலிகொப்டரில் தாழ்வாகப் பறந்து திரிந்த ஆயுதப்படையினருக்கு தீவிரவாதிகளின் முகாம் ஒன்று தெரிந்ததாகவும் அதனைத் தொடர்ந்து அப்பகுதி இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆயினும் அந்த முகாமில் இருந்த இளைஞர்கள் அனைவரும் தப்பி விட்டனர் என்றும் அந்த முகாமிலிருந்த ஜீப் ஒன்றும், மற்றொரு வாகனமும் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் இச் சம்பவத்தின் போது தீவிரவாத இளைஞர்களும் பதில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து மாமூலை, கணுக்கேணி, தண்ணீரூற்று ஆகிய பகுதிகளில் ஹெலிகொப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதினால் பீதியுற்ற மக்கள் அவ்விடங்களிலிருந்து முள்ளியவளைப் பகுதிக்கு இடம் பெயர்ந்தனர்.

முல்லைத்தீவு தண்ணீரூற்று வீதியிலுள்ள 3 ம் கட்டை என்ற இடத்தில் இராணுவத்தினர் வீதியால் சென்ற வாகனங்களையும், மக்களையும் சோதனை செய்தனர் பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதும் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

வழியில் வந்த உழவு இயந்திரம் ஒன்றையும் இராணுவத்தினர் கைப்பற்றினர் இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு, வற்றாப்பளை, முள்ளியவளை ஆகிய பகுதிகளிலும் பதற்றம் ஏற்பட்டது நேற்று முன் தினம் முல்லைத்தீவில் போக்குவரத்து சேவைகளும் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தன

நேற்று நிலைமை வழமைக்கு திரும்பியது.

---

நள்ளிரவுச் சம்பவம்

# 'வான்'மீது பீரங்கி தாக்குதல் இருவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலை நோக்கிச் சென்ற வான் ஒன்று பீரங்கிக் குண்டுத் தாக்குதலுக்கிலக்கானதால் சாரதியும் உதவியாளரும் படுகாயமடைந்தனர். மற்றொருவர் வானிலிருந்து பாய்ந்தோடியதால் காயமெதுவுமின்றித் தப்பிக் கொண்டார். வான் முற்றாகச் சேதமடைந்தது.

நேற்று முன்தினம் இரவு 11-45 மணியளவில் இக்குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

முத்திரைச்சந்தியைச்சேர்ந்த பத்மநாதன் வாசுதேவன் [சாரதி [46வயது] என்பவரும் நெடுந்தீவைச்சேர்ந்த நாகநாதன் சுந்தரலிங்கம் [23வயது] என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்களிருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள "ஐஸ்கிறீம்" விற்பனவு நிலையம் ஒன்று தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் திருவிழாவை ஒட்டி 'ஐஸ்கிறீம்' கடைபோடுவதற்கு அச்சுவேலி தொண்டமாறு வீதிவழியாக மேற்குறிப்பிட்ட நபர்கள் வானொன்றில் தளபாடங்களை ஏற்றிக்கொண்டு சென்றதாகவும், தொண்டமானாறு இராணுவ முகாமுக்கு முன்னாலுள்ள காற்றுடி நிலையத்தை குறிப்பிட்ட வான் அண்மித்ததும் சரமாரியாக வானை நோக்கி பீரங்கி பாவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பீரங்கிச் சூடுகள் வானை நோக்கித் தாக்கவே சாரதியும் உதவியாளரும் காயங்களுடன் வானைவிட்டுப் பாய்ந்து நிலத்தில் பதுங்கிக்கொண்டதாகவும் மற்றொருவர் மறுபக்கத்தால் பாய்ந்து ஓடித் தப்பித்துக்கொண்டதாகவும், பின்னர் காயமடைந்த இருவரும், நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

---

யாழ், நீதிமன்றக் கொள்ளை:

# இரகசியப்பொலிஸ் விசாரணையில் இளைஞர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்தில் இடம் பெற்ற கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணைக்காக அழைக்கப்பட்ட மூன்று காவலாளிகளில் இளைஞரான ஒருவர், இரகசியப்பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். மற்றைய காவலாளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியைச்சேர்ந்த சுந்தரராஜன் என்றழைக்கப்படும் இளம் காவலாளியே விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

---

## பாரதி பிள்ளைத்தமிழ் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பாரதி நூற்றாண்டை முன்னிட்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான பிரபந்தப் போட்டியில் முதற்பரிசு பெற்ற புலவர் க. த ஞானப்பிரகாசத்தின் "பாரதி பிள்ளைத்தமிழ்" நூல் வெளியீட்டு விழா இன்று மாலை இடம்பெறுகின்றது

யாழ் மறைமாவட்ட ஆயர் இல்ல திருமறைப் பணிநிலையத்தில் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் கல்வித்திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்கிறார்.

விழாவின் ஆசியுரைகளை, இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை, யாழ் இலக்கிய வட்டத்தலைவர் திரு. சு. சபாரத்தினம் (சபாபாரதி, "பாதுகாவலன்" ஆசிரியர் ஆகியோர் வழங்குவார்கள். கலாநிதி இ பாலசுந்தரம், திரு க சொக்கலிங்கம் சொக்கன்), வித்துவான் ச அடைக்கலமுத்து ஆகியோர் நூல் ஆய்வுரை நிகழ்த்துவர். நூலின் முதற்பிரதியை முன்னாள் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு பி.எல் பற்றிக் பெறுவார் [அ]

---

வவனியா சம்பவம்

# விசாரணைக் குழு வந்து திரும்பியது

[வவனியா]

வவனியா படுகொலைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த நேற்றுமுன்தினம் வந்த இராணுவ உயரதிகாரிகளைக் கொண்டகுழு நேற்றுக் கொழும்பு திரும்பியது.

வவனியா இராணுவ முகாமில் நடைபெற்ற விசாரணைக் குழு முன்னிலையில வவனியாவிலுள்ள நாசமாக்கப்பட்ட இரு அரிசி ஆலைகளில் வேலை செய்யும் இரு தொழிலாளர்கள் மாத்திரமே சாட்சியமளித்தனர்

இக் குழுமுன்பாகச் சாட்சியமளிப்பதற்கு சட்டத்தரணி சொர்ணபாலாவும் அழைக்கப்பட்டிருந்த போதிலும் அவர் தமக்கு எதுவும் தெரியாதென்று மறுத்துவிட்டாராம்.

இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட அனர்த்தங்களை விசாரிக்க இராணுவ அதிகாரிகளே வந்துள்ளதால், மேலும் தங்களுக்கு இடர் நேரிடலாமென்ற பாதிக்கப்பட்டவர்கள் அச்சம்கொண்டிருப்பதாலும், ரேகுடும்பத்தைச்சேர்ந்த பலர் கொல்லப் பட்டதால் அவர்களைப் பற்றித் தெரிவிக்க எவருமில்லாததாலும், பாதிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கானோர் இருக்க வீடு வசதியின்றி வெளியிடங்களில் தஞ்சம் கோரியிருப்பதாலும் சாட்சியமளிக்க எவரும் முன்வரவில்லை எனத் தெரியவருகிறது. (மா)

---

கண்டன...,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்திய மத்திய அரசே! பாலசிங்கத்தை விடுதலை செய்; விடுதலைப் போராளிகளை நாடு கடத்தாதே; எம்மை அரைகுறை அரசியல் தீர்வுகளுக்கு நிர்ப்பந்திக்காதே' என்ற வாசகங்களும் அச்சுவரொட்டிகளில் காணப்பட்டன (மா)

---

## அகதிகளுக்கு நேசக்கரம்

யாழ்ப்பாணம்]

வவனியா, திருமலை ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்து அநாதரவாக இருந்த அகதிகளுக்கு பொது உதவி ஸ்தாபனங்கள், அன்னையர்முன்னணி ஆகியன திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் முகாம் ஒன்று அமைத்து உதவி புரிகின்றார்கள். இதற்கு சமூக சேவைப் பகுதியினரும் பொது மக்களும் ஆ வேண்டிய உதவிகளைச் செய்கிறார்கள்.

அதே நேரத்தில் வவனியா. திருகோணமலைப் பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்டுவரும் தமிழ் அகதிகளுக்கு தங்கும் வசதியும் நிவாரண உதவியும் வழங்குமாறு கோரி பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கச் செயலாளர் திரு ஐ தி. சம்பந்தன், யாழ் அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

---

## 'லங்கா புவத்' செய்தி 'புளட்' மறுப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக [புளட்] செயலதிபர் உமாமகேஸ்வரன் லெபனானுக்குத் தப்பியோடிவிட்டதாக 'லங்காபுவத்' செய்திஸ்தாபனம் நேற்றுத் தெரிவித்த தகவல் முற்றிலும் தவறானது என்று தமிழீழ மக்கள் விடுதலைக்கழக செய்தி மக்கள் தொடர்புஸ்தாபனம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக 'புளட்' விடுத்துள்ள அறிக்கையில் "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் திரு. உமா மகேஸ்வரன் லெபனானுக்குத் தப்பி ஓடிவிட்டதாக 'லங்கா புவத்' அறிவித்துள்ளது இச்செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் குழப்பி விடுகின்ற சிறீலங்கா அரசின் தந்திரோபாயமான சதித்திட்டமே இது என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தமிழ் மக்களுக்கு கூறுகின்ற அதே வேளை; இப்படிப் பொய்யான பிரசாரங்களைச் செய்யும் செய்தி ஸ்தாபனங்களுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கிறோம்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

---

## தமிழ் மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப் பாரதம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும் என்று திரு. ராஜீவ் காந்தி உறுதி கூறினார்.

சமரசப்பேச்சுக்களின் போது போர் நிறுத்தம் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏராளமான தமிழ்மக்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் குறித்து தமிழ் மக்கள் வேதனையடைந்துள்ளார்கள் என்று கலாநிதி ஜெயவர்தனவிடம் பாரதப் பிரதமர் சொன்னதாகக் கூறப் படுகிறது.

இந்த சந்திப்போது இந்தியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் பேர்னாட் திரு. திலகரத்தினவும் வெளிவிவகார செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியும் உடனிருந்தார்கள். [க]

---

## இனப்பிரச்னை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு செய்தி ஏஜென்ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்

"இலங்கையில் ஒன்றுமறியாத பொதுமக்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்படுவதும், போர் நிறுத்தம் மீறப்படுவதும் பெருத்த வேதனை தருவதாகும்

"இப் பகுதியில் ஒத்துழைப்பும். அண்டை உறவும் தவிர பாரதத்திற்கு உயர் முன்னுரிமை உள்ள விஷயமாகும்' என்று மேற்படி பேட்டியில் தெரிவித்த திரு ராஜீவ்காந்தி, இலங்கையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஏற்புடைய தீர்வைக் கண்டறிவதில் இலங்கை அரசையும் தமிழ்க் குழுக்களையும் சந்திக்க வைக்கப் பாரதம் முழு முயற்சி மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

---

## கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து கொழும்புக்கு அனுப்பப்படவிருந்த 250 பைக்கற் சிமெந்தும் லொறியும் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப் பட்டுள்ளது

---

## பாலசிங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவுகள் நேற்றிரவு அளிக்கப்பட்டன.

அவர்கள் தாங்கள் விரும்பும் எந்த நாட்டிற்கும் செல்லலாம் என்று தெரிவித்த அதிகாரபூர்வ வட்டாரங்கள் வெளியேற்ற உத்தரவுகள் பற்றி விளக்கமளிக்க மறுத்து விட்டன.

டாக்டர் பாலசிங்கம் பிரிட்டிஷ் (கடவுச்சீட்டு) பாஸ்போட் வைத்திருப்பவர் இங்கிலாந்தில் வசிப்பவர். 1983-ம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்தவர்

திரு. சந்திரகாசன் இலங்கைப் பிரஜை. தமிழீழத் தந்தை காலஞ்சென்ற எஸ் ஜே வி செல்வநாயகத்தின் புதல்வர்.

தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்த திரு என் சத்தியேந்திராவும். தாமும் வெளியேற்றப்படக்கூடும் என்று எதிர்பார்த்து ஏற்கனவே நாட்டைவிட்டுச் சென்று விட்டார் என்று சென்னையில் தெரிவிக்கப்பட்டது

திம்புபேச்சுக்களிலிருந்து தமிழ்போராளிகளின் அமைப்புக்கள் வெளியேற டாக்டர் பாலசிங்கம் முக்கியகாரணம் என்றும், தமிழ்ப்போராளிகள் அமைப்புகளும் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், சந்தித்து பேச, அவர் தடையாக இருப்பதாக இந்திய அரசு கருதுவதாகவும் சென்னையிலிருந்து வெளியான சில தகவல்கள் தெரிவித்தன.

---

இலக்கம் 68 "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389, 24126,